

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)

(பதினான்காவது பேரவை)

பன்னிரெண்டாவது அறிக்கை

"பால்வளம்"

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 31 JUL 2014)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)



"பால்வளம்"
குறித்த மதிப்பீடு தொடர்பான குழுவின் அறிக்கை

பொருளடக்கம்

			பக்கம்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு		...	i
முன்னுரை		...	iii
	பாகம் – 1 அறிக்கை		
	முகவுரை	...	1
I	நிர்வாக அமைப்பு	...	2
II	துறையின் செயல்பாடுகள்	...	3–4
III	பால்வளத் துறையின் குறிக்கோள்கள்	...	4–5
IV	பால் கொள்முதல்	...	5–6
V	மாநிலத் திட்டங்கள்		7
VI	திருவண்ணாமலை பால் மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை	...	7
VII	பெரம்பலூரில் புதிய பால் பண்ணை அமைத்தல்	...	7–8
VIII	பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்	...	8
IX	பால் குளிரூட்டும் நிலையம்	...	9
X	பால் பண்ணைகளை நவீனப்படுத்துதல்	...	9
XI	பால் குளிர்விப்பான் மையம் அமைத்தல்	...	9–10
XII	தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் பகுப்பாய்வுக் (Milk Analyser) கருவிகள் வழங்குதல்	...	11
XIII	சென்னை, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் வெண்ணை குளிரூட்டும் வசதி ஏற்படுத்துதல்	...	11
XIV	சங்க உறுப்பினர்களுக்கு பால் கறவை இயந்திரங்கள் வழங்கல்	...	12
XV	செயலிழந்த பால் கூட்டுறவுச் சங்கங்களை புதுப்பித்தல்	...	12–13
XVI	குளிர்பதன வசதி உள்ள வாகனங்கள் மற்றும் வெப்பத்தடை செய்யப்பட்ட வாகனங்கள் வாங்குதல்	...	13
XVII	திருச்சி பால் பண்ணையில் பால் குளிர்விப்பு மற்றும் நவீன சுத்திகரிப்பு வசதிகள் ஏற்படுத்துதல்	...	13–14
XVIII	கிருஷ்ணகிரி பால் பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்		14
XIX	சோழிங்கநல்லூர் பால் பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்		15
XX	தூய பால் உற்பத்தித் திட்டம்		15–16
XXI	" கூட்டுறவுகளுக்கு உதவுதல் " புனரமைப்பு திட்டம்		16–17
XXII	தேசிய உணவு பதப்படுத்தும் முனைப்பகத் திட்டம்		17
XXIII	உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய அலுவலர் நியமனம் செய்தல்	...	18–19
XXIV	தனியார் பால் பண்ணை உரிமையாளர்களுக்கு உரிமம் (Licence) வழங்குதல்	...	19

XXV	தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்	...	20
XXVI	இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தனியாக பால் கூட்டுறவுச் சங்கம்	...	20–21
XXVII	நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட கறவை மாடுகள் வாங்க நடவடிக்கை	...	21
XXVIII	பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதி	...	22
XXIX	வேடசந்தூர் தொகுதியில் மூடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் இயங்கச் செய்தல்.	...	22
XXX	அரசின் மானியங்கள் ஆவின் நிறுவனத்திற்கு சென்றடைய நடவடிக்கை	...	23
XXXI	விலையில்லா கறவை மாடுகள் மூலம் கிடைக்கிற பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கே கிடைக்க வழிவகை செய்தல்	...	23–24
XXXII	பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க எளிமையான விதிமுறைகள் உருவாக்குதல்	...	24
XXXIII	பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவையில்லாது பால் பணம் பட்டுவாடா செய்தல்	...	24–25
XXXIV	பால் உபபொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை	...	26
XXXV	கூடுதல் ஆவின் பால் முகவர்கள் நியமனம் செய்தல்	...	27
XXXVI	பணியாளர் நியமனம்	...	27–29
XXXVII	ஆவின் நிறுவன ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கல்	...	29
XXXVIII	ஆவின் கடைகளில் ஆவின் பொருட்கள் மட்டும் விற்பனை	...	30
XXXIX	ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பால் உற்பத்தி நிறுவனம் அமைத்தல்	...	30–31
XL	பால்வளத் துறையில் மின் ஆளுமை திட்டம் (E- Governance)	...	31
XLI	கூட்டுறவுச் சங்கத்தில் புதிய உறுப்பினர்களை சேர்த்தல்	...	31
XLII	பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு கடன் வழங்கல்	...	31–32
XLIII	கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கல்	...	32–35
XLIV	மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் ESI சட்டத்தை செலுத்துவதிலிருந்து விதி விலக்கு	...	35
XLV	சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிக பால் விற்பனை நிலையங்களை அமைக்க நடவடிக்கை	...	35–36
XLVI	மாவட்டத்தில் பழுதடைந்த பால் பதன ஆலையின் இயந்திரங்களை மாற்றல்	...	36
XLVII	பழுதடைந்த பால்பதன ஆலையின் இயந்திரங்களை மாற்றல்	...	37

பாகம் – 2

நிகழ்ச்சிப் பகுதி .. 38–51

இணைப்பு–I	பால் வளத்துறை நிர்வாக அமைப்பினை காட்டும் விளக்கப்படம்	...	53
இணைப்பு–II	பால் கூட்டுறவு சங்கங்களின் மூன்றடுக்கு அமைப்பு முறை – விளக்கப்படம்.	...	55
	பரிந்துரைகளின் சுருக்கம்	...	56–62
	குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	...	64

மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2013–2014)

(2013–ஆம் ஆண்டு மே திங்கள் 16–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் (அலுவல் காரணமாக)

3. $ திரு. ச. இராமச்சந்திரன்
தலைவர், பொதுக்கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
@திரு. பி.வி. கதிரவன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. திரு. பி.ஜி. நாராயணன்
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திருமதி த. இந்திராகாந்தி

6. திரு. செ. காமராஜ்

7. டாக்டர் க. கிருஷ்ணசாமி

8. திரு. சு. குணசேகரன்

9. திரு. அர. சக்கரபாணி

10. திரு. ஆர். சாமி

11. திரு. ஆர். சீனிவாசன்

12. திரு. தங்கதமிழ்செல்வன்

13. திரு. ப. தன்சிங்

14. திரு. வ. நீலகண்டன்

15. திரு. ச. பழனிச்சாமி

16. திரு. எஸ்.ஆர். பார்த்திபன்

17. செல்வி கே. பாலபாரதி

18. திரு. எஸ். ஜான் ஜேக்கப்

19. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்

திரு. க. பாலகுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

$ 9.12.2013 ஆம் நாள் வரை
@ 26.5.2014 ஆம் நாள் முதல்

முன்னுரை

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 16.5.2013–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். இது தவிர மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர், பொது கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஐந்து மதிப்பீடுகளில், " பால்வளம் " மதிப்பீடும் ஒன்றாகும். "பால்வளம்" குறித்த மதிப்பீட்டை கூர்ந்தாய்வு செய்வதற்காக குழு, தேனி, திண்டுக்கல், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 11 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் கலந்துரையாடியது. 30.12.2013 அன்று சென்னையில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் அரசுச் செயலாளர், ஆணையர் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை மற்றும் இதர துறை அலுவலர்களுடன் குழுவின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வறிக்கைக்கு 30.5.2014 அன்று குழு ஒப்புதல் அளித்தது. "பால்வளம்" குறித்த குழுவின் அறிக்கை பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பாக அறிக்கையை சட்டமன்றப் பேரவைக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், " பால்வளம்" குறித்த இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

" பால்வளம் " தொடர்பான மதிப்பீட்டினை ஆய்வு செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அளித்த கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை அலுவலர்களுக்கு குழு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. பார்வையிடுவதற்கு வசதியாக குழுவின் பரிந்துரைகள் பெரிய எழுத்துக்களில் (Bold) அச்சிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையுடன் பரிந்துரைகளின் சுருக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை – 600 009,
நாள்: 30.5.2014,
வைகாசி 16 .
திருவள்ளுவர் ஆண்டு – 2045.

அ.பாப்பாசுந்தரம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

பாகம் 1 அறிக்கை

"பால்வளம்" குறித்த அறிக்கை

முகவுரை

தமிழகத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கிய விவசாயப் பெருமக்களுக்கு வாழ்வாதாரத்தை தரக்கூடிய துறையாக மட்டுமல்லாது, மக்களுக்கு சரிவிகித சத்துணவான பாலை உற்பத்தி செய்யும் உன்னதத் துறையாகவும் பால் வளத் துறை திகழ்கிறது.

இந்தியா உலகளவில் அதிக கறவை மாடுகள் கொண்ட நாடாக இருந்தும் ஒரு காலத்தில் பால் உற்பத்தியில் பற்றாக்குறை நாடாக இருந்தது. தற்போது தன்னிறைவு அடைந்து பால் உற்பத்தி நாளொன்றுக்கு 12.9 கோடி மெட்ரிக் டன்னாக உயர்ந்து உலக அளவில் பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாடு தற்போது பால் உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குவது பெருமைக்குரியதாகும்.

இரண்டாவது 'வெண்மைப் புரட்சி'யை தமிழ்நாட்டில் உருவாக்கியதன் விளைவாக பால் உற்பத்தி பலமடங்கு அதிகரித்து. பால் உற்பத்தியில் 8–வது இடத்தை நமது மாநிலம் அடைந்துள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு நாளைக்கு 187 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது.

பால் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் மேம்பாட்டுக்காகவும் பால் உற்பத்தியாளர்களுக்கு பாலுக்குரிய நியாயமான அதிகபட்ச விலை, மானியத்துடன் பல திட்டங்கள் ஆகியவற்றுடன் கால்நடைத் தீவனம், இடுபொருள் வழங்குதல், புதிய கறவை மாடுகள் வாங்க கடன் உதவி வழங்குதல், உறுப்பினர்கள் பால் பண்ணை அமைத்தல் போன்ற பணிகளை நிறைவு செய்வதற்காக மாவட்ட ஒன்றியங்கள் தூரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணத்தை உரிய நேரத்தில் பட்டுவாடா செய்ய வேண்டுமென்பதில் அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாவட்ட ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க இயலாதபோது அரசு 115.85 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கி பால் பணம் பட்டுவாடா நிலுவை இல்லாது வழங்கி உதவியுள்ளது.

I. நிர்வாக அமைப்பு:

1. தமிழகத்தில் 1958 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட பால்வளத் துறையின் இன்றைய வளர்ச்சி, சிறப்பானது மற்றும் குறிப்பிடத்தக்கதுமாகும். பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள், 01–08–1965 முதல் பால் வளத்துறைக்கு மாற்றப்பட்டது.

2. தமிழ்நாடு பால் வளத் துறை, பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அரசு மட்டத்தில் அரசுச் செயலாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

3. இத்துறையின் தலைவராக மாநில அளவில் இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் உள்ளார்.

4. பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநராகவும் இத்துறையின் ஆணையர் செயல்பட்டு வருகிறார். [பால் வளத் துறை நிர்வாக அமைப்பினைக் காட்டும் விளக்கப் படம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு I)]

5. புதிய சங்கங்களை பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களைப் புதுப்பித்தல், சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளின் மீது நடவடிக்கை எடுத்தல், தேர்தல் நடத்துதல், நிர்வாகக் குழு அமைத்தல் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சங்கங்களுக்கு ஆணை பிறப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988 ஆகியவற்றின்படி ஆணையர் செயல்பட்டு வருகிறார்.

6. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்களின் சட்டரீதியான கூட்டுறவுப் பணிகளை நடைமுறைப்படுத்த மாநில அளவில் துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் மாவட்ட அளவில் 24 துணைப் பதிவாளர்களும் (பால்வளம்) உள்ளனர். தற்போது திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் திருப்பூர் மாவட்டத்தில் ஒரு துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகம் ஏற்படுத்தி, 1–4–2013 முதல் செயல்பட்டு வருகிறது.

7. பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு அமைப்பு முறையைக் கொண்டுள்ளது.

1. கிராம அளவில் – அடுக்கு 1 – தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்கள் (எண்ணிக்கை 11,397)

2. மாவட்ட அளவில் – அடுக்கு 2 – பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் (எண்ணிக்கை 17)

3. மாநில அளவில் – அடுக்கு 3 – தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (எண்ணிக்கை 1)

[பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு அமைப்பு முறை விளக்கப் படம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 2)]

II. துறையின் செயல்பாடுகள்

8. தமிழ்நாட்டில் பால்வளத் துறையின் கட்டுப்பாட்டில் பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு முறை இயங்கி வருகிறது. பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் பல திட்டங்களை தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் இணையம் மூலம் பால்வளத்துறை செயல்படுத்தி வருகிறது.

9. பால்வளத் துறை, நிலம் இல்லாத நலிவடைந்த விவசாயிகளுக்கு மட்டுமே பிரதானமாக இருந்தது. தற்போது இந்தத் தொழில் அனைவருக்கும் வாழ்க்கைக்குத் தேவையான வருவாய் தரக்கூடிய மாற்றுத் தொழிலாக முன்னேறி உள்ளது. சமூகப் பொருளாதார நிலையை விரைவில் மேம்படுத்தும் நோக்கங்களுடன் மாநில மற்றும் மத்திய அரசு பல திட்டங்களை மாவட்ட அளவில் செயல்படுத்தி வருகின்றன.

10. மாநிலத் திட்டங்கள் மூலம் கிராம அளவில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகின்றன. பால் குளிர்விப்பான்கள், தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் பகுப்பாய்வுக் கருவிகள் வழங்கி நவீன சுத்திகரிப்பு வசதிகள் ஏற்படுத்தி, தூய பால் உற்பத்தித் திட்டத்தினை சீரிய முறையில் மத்திய, மாநில அரசு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

11. "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" என்ற திட்டத்தினை நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையங்களைப் புனரமைப்பதற்காக மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

12. தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சித் திட்டத்தினை துரிதமாக செயல்படுத்தி இலட்சியத்தை அடைவதற்கு துறை பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

13. பால் உற்பத்தியைப் பெருக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு, ஈரோடு தீவன ஆலையில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 2000 முதல் 2500 மெட்ரிக் டன் வரை உற்பத்தி செய்யப்பட்டு தீவனம் வழங்கப்படுகிறது. மேலும், தாது உப்பு கலவை தயாரிக்கப்பட்டு உற்பத்தியாளர்களுக்கு இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

14. காவேரி சிறப்பு கூடுதல் நிவாரண மற்றும் வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் ரூ.15.00 கோடி மதிப்பிலான அடர் தீவனம் 8 டெல்டா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் பசுந்தீவனம் கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து உற்பத்தியாளர்களுக்கு இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

15. உற்பத்தியாளர்களின் இல்லங்களுக்கே சென்று அவர்களின் கால்நடைகளுக்குத் தேவைப்படும் முதலுதவி, மற்றும் இதர மருத்துவ வசதிகள் இலவசமாக 155 நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் ஏற்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சி பெற்ற கிராம நல அலுவலர்கள் மூலம் செயற்கை கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

16. இத்துறை மூலம் மேலும் ஒன்றியங்கள் ஈட்டிய இலாபத்திலிருந்து 2 இலட்சம் உறுப்பினர்களுக்கு அவர்கள் வழங்கிய பாலின் அளவிற்கு ஏற்ப லிட்டர் ஒன்றுக்கு 40 பைசா முதல் ரூ.1/– வரை கூடுதல் கொள்முதல் விலையாக ரூ.100/– கோடி வரை வழங்கப்பட்டுள்ளது.

17. 2010–2011 ஆம் ஆண்டில் பால் நேரடி கொள்முதல் நாள் ஒன்றுக்கு 20 இலட்சத்து 66 ஆயிரம் லிட்டர், 2011–2012 ஆம் ஆண்டில் பால் நேரடி கொள்முதல் நாள் ஒன்றுக்கு 21 இலட்சத்து 39 ஆயிரம் லிட்டர், 2012–2013 ஆம் ஆண்டில் இன்னும் கூடுதலாக 24 இலட்சத்து 36 ஆயிரம் லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் வீதம் 1–1–2014 ஆம் தேதி முதல் உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டு வழங்கப்பட்டு வருகிறது.

18. தீவிர பால் பெருக்குத் திட்டம் மற்றும் பால் வளத் துறையில் மின் ஆளுமை திட்டம் மூலம் பெரும்பான்மையான பணிகளை இத்துறை செயல்படுத்தி வருகிறது. அதாவது ஒளிவு மறைவற்ற நிர்வாகத்திற்காக மின் ஆளுமை முறை ஊக்குவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

III. பால்வளத் துறையின் குறிக்கோள்கள்:

19. இத்துறையின் குறிக்கோள்கள் மற்றும் இவற்றை நிறைவேற்ற பின்பற்றப்படும் நடவடிக்கைகள்:

அ. ஆதாயமான விலை, உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பாலுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

ஆ. இடுபொருள் மற்றும் கால்நடை மருத்துவ உதவி வழங்கி பால் உற்பத்தியாளர்கள் மூலம் பால் உற்பத்தியை மேம்படுத்துதல்.

இ. ஒருங்கிணைந்த அமைப்புசார் தொழிலாக அமைப்புசாரா பால் தொழிலை முறையாக மாற்ற நடவடிக்கை எடுத்தல்.

ஈ. பால் பண்ணை செயல்பாடுகளைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துதல்.

உ. தூய, மற்றும் உணவு பாதுகாப்பு வழிமுறைகளின்படி உற்பத்தி செய்யப்பட்ட தரமான, நியாயமான பால் நுகர்வோருக்குக் கிடைக்க வழிவகை ஏற்படுத்தல்.

ஊ. பால் மற்றும் பால் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட தரக் குறியீட்டுடன் சரியான அளவுகளில் கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

எ. பிற தொழில்களின் வளர்ச்சிக்கு சமமாக பால் பண்ணை தொழிலை தொடர்ந்து வளர்ச்சி அடைய உறுதி செய்தல்.

ஏ. கலப்புத் தீவனம் மற்றும் பசுந்தீவனம் தேவையான அளவு கறவை மாடுகளுக்குக் கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

ஐ. நவீன முறை தொழில்நுட்பங்களைப் புகுத்துதல்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றிட துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்:

i. கிராம அளவில் தரப் பரிசோதனை மூலம் தூய பால் உற்பத்தித் திட்டத்தைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

ii. கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கும் பால் பண்ணைகளை மேம்படுத்துதல்.

iii. உணவு பாதுகாப்பு முறையினை செயல்படுத்தி தூய, தரமான பால் உபபொருட்களைத் தயாரித்து நுகர்வோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iv. கறவை மாடுகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை, செயற்கைமுறை கருவூட்டல் வசதிகளை அளித்தல், கலப்புத் தீவனம் வழங்குதல், பசுந்தீவன வளர்ப்பு மற்றும் காப்பீடு திட்டத்தினை கூட்டுறவு அமைப்பிலுள்ள பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குக் கிடைக்க வழிவகை செய்தல்.

v. மத்திய/மாநில அரசின் நேரடி மற்றும் பங்களிப்புத் திட்டங்களை தமிழகத்தின் பால்வள மேம்பாட்டிற்கு செயல்படுத்துதல்.

vi. மின் ஆளுமை முறையினை ஒளிவு மறைவு இல்லாத நிர்வாகத்திற்காக ஊக்குவித்தல்.

இவ்வாறு விவசாயிகளுக்கு பணியாற்றிடவும், பால் உற்பத்தியைப் பெருக்கவும் பால்வளத் துறை அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

IV. பால் கொள்முதல்:

20. தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சித் திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்த இலக்கு மற்றும் முந்தைய ஆண்டுகளில் எவ்வாறு இருந்தது, தற்போதைய மொத்த பால் உற்பத்தி தமிழ்நாட்டில் எவ்வளவு என்பதை குழு அறிய விரும்பியது.

21. சென்னையில் 30-12-2013 அன்று நடைபெற்ற குழுவின் கலந்துரையாடல் கூட்டத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு நாளைக்கு 187 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. இதில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வெறும் 30 இலட்சம் லிட்டர்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. தனியார் பால்பண்ணைகள் தமிழகத்தில் 10 உள்ளன. இவைகள் மூலம் கிட்டத்தட்ட 42 இலட்சம் லிட்டர் ஒரு நாளைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. அது தவிர 12 சதவிகித பாலை உற்பத்தியாளர்களே சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். 91 இலட்சம் லிட்டர் பால் சிறு வணிகர்கள் மூலம் தேநீர் மற்றும் சிற்றுண்டிக் கடைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அமைப்பு சார்ந்த அமைப்புகள் (Organised Sector) என்று எடுத்துக்கொண்டால் 72 இலட்சம் லிட்டர் பால் கூட்டுறவு மற்றும் தனியார் பால்பண்ணைத் தொழில் நிறுவனங்களுக்கும், மீதம் உள்ள 110 இலட்சம் லிட்டர் பால் தினமும் அமைப்புசாரா அமைப்புகளுக்கும் (Unorganised Sector) செல்கிறது. இவ்வாறு உற்பத்தியாகும் மொத்த பால் மேற்கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது என துறையின் அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிற்குத் தெரிவித்தார்.

22. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் 30 இலட்சம் லிட்டர் பாலில் 4 இலட்சம் லிட்டர் முதல் 5 இலட்சம் லிட்டர் வரை உள்ளூர் விற்பனைக்கும், மீதமுள்ள 26 இலட்சம் லிட்டர் பால் அரசின் பால் பண்ணைகளுக்கும் வழங்கப்படுகிறது. இங்கு 17 யூனியன்கள் உள்ளன. இவைகள் பெறப்படும் பாலினை தர நிர்ணயத்துடன் சுத்திகரிப்பு செய்து விற்பனை செய்கிறது. 26 இலட்சத்தில் 21 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. 11.37 இலட்சம் லிட்டர் பால் சென்னை மாவட்டத்திற்கும் மீதமுள்ள 9 இலட்சம் லிட்டர் பால் இதர மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்யப்படுவதாக அரசுச் செயலர் அவர்கள் குழுவிற்குத் தெரிவித்தார்.

23. தமிழகத்தில் உற்பத்தியாகும் பால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் மற்றும் விற்பனை செய்யும் அளவு தனியாரைக் காட்டிலும் குறைவாக உள்ளதை குழு அறிகிறது. இந்நிலைக்குரிய காரணத்தை ஆய்வு செய்து இதனை உயர்த்த துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

24. தமிழ்நாட்டில் உள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் பால் கொள்முதல் நாளொன்றுக்கு சராசரி 20.67 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து 26 இலட்சம் லிட்டர் ஆக உயர்ந்துள்ளது. மேலும் கூடுதலாக கடந்த 2012 நவம்பரில் சாதனை அளவாக 27.15 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது எனவும் குழுவிடம் துறை மூலம் தெரிவிக்கப்பட்டது.

25. தனியார் பால் உற்பத்தித் தொழில் நிறுவனம் மூலம் பால் அதிக அளவு விற்பனை செய்வதற்கு வாய்ப்பு இருக்கும்போது, மக்கள் அதிக அளவில் விரும்பும் ஆவின் பால் கொள்முதலை 27 இலட்சம் லிட்டரிலிருந்து 40 இலட்சம் லிட்டராக அதிகப்படுத்தி கொள்முதல் செய்து விற்பனையை அதிகரிக்க ஆவின் நிறுவனம் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என துறையிடம் குழு வினவியது.

26. இதற்கு ஆவின் நிறுவனத்தின் மூலம் 30 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யும் திறனே உள்ளதாகவும், இருப்பினும் துறை 80 சதவீதம், 90 சதவீதம் வரை கொள்முதல் செய்துள்ளது என்று அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிற்குத் தெரிவித்தார்.

27. தமிழ்நாட்டிலுள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் பால் கொள்முதலை நாளொன்றுக்கு சாதனை அளவான 27.15 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து உயர்த்துவதற்கு துறை வழிவகை காண வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

28. மேலும், தமிழ்நாட்டில் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் இயங்கி வருகிறது. இதைத் தவிர கூடுதலாக இரண்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் சென்னையில் புதிதாக ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிற்குத் தெரிவித்தார்.

29. புதியதாக இரண்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கி உள்ளதை குழு அறிகிறது. துறை துரித நடவடிக்கையினை எடுத்து புதிய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் அமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

V. மாநிலத் திட்டங்கள்

30. பகுதி–2 திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.1.25 கோடியும், 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.1.08 கோடியும், 2013–2014 ஆம் ஆண்டில் 2.18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறது என துறை குழுவிற்குத் தெரிவித்தது.

31. பால்வள மேம்பாட்டுத்துறை ஆணையர் அலுவலகத்திற்கு 10 கணினிகள் மற்றும் துணை கருவிகள் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குதல்.

32. மாதவரம் பால்பண்ணை வளாகத்திலுள்ள பழப்பண்ணைக்கு ரூ.20.00 இலட்சம் செலவில் 571 மீட்டர் நீளம் 6 அடி உயரம் சுற்றுச்சுவர் அமைத்தல்.

33. பால்வளத்துறை ஆணையர் அலுவலகத்திற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜெனரேட்டர் (50 KVA) வாங்குதல்.

34. துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களுக்கு கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக ரூ.18.00 இலட்சம் செலவில் புதிய வாகனங்கள் (சீருந்து) வழங்குதல்.

35. மேற்காணும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது குறித்து துறை அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

VI திருவண்ணாமலை பால் மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை

36. திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் ரூ.60.18 கோடி செலவில் தேசிய பால் வாரியம் மூலம் பால் மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கும் பணி குறித்த காலத்திற்குள் நிறைவு பெறுமா என்பதை குழு அறிய விரும்பியது.

37. திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால்பண்ணை மற்றும் 20 டன் பால்பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றும், வருகின்ற மார்ச் 2014 ஆம் ஆண்டு முதல் செயல்படவுள்ளது என்றும் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழு முன் தெரிவித்தார்.

38. திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் குறித்த காலத்திற்குள் பால் மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கும் பணிகளை நிறைவு செய்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

VII பெரம்பலூரில் புதிய பால் பண்ணை அமைத்தல்

39. பெரம்பலூரில் புதிய பால் பண்ணை அமைக்கும் பணி குறித்து துறை எடுத்துள்ள நடவடிக்கையை குழு அறிய விரும்பியது.

40. பெரம்பலூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள புதிய பால் பண்ணை நிறுவுவதற்கு அரசாணை கடந்த 2013 நவம்பர் மாதம் வெளியிட்டு, திட்ட மதிப்பீடான 36 கோடியே 88 இலட்சம் ரூபாய் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 50 விழுக்காடு நிதி மானில அரசு வட்டியில்லாக் கடனாக வழங்கியிருக்கிறது. இதுபோன்ற நடவடிக்கைகளின் காரணமாக பால் உற்பத்தி படிப்படியாக மேம்பாடு அடைந்து கொண்டு வருகிறது என்பதை ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

41. பெரம்பலூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை நிறுவும் பணியை விரைவாக மேற்கொண்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

VIII. பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

42. தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் பால்வளத்தை மேம்படுத்துவதற்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (NADP) 2013–2014 இல் புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க பெறப்பட்ட கருத்துருக்கள் மீது துறை எடுத்த நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

43. இத்திட்டத்தின்கீழ் 4 வருடங்களில் 6,000 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க உள்ளதாகவும், 2011–2012 இல் 1,542 கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி இருப்பதாகவும், அவற்றின்மூலம் 1 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது எனவும், இதனை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

44. தேசிய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2013–2014 இல் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் புதிதாக பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் நவம்பர் 2013 இல் துவக்கப்பட்டது. 17–12–2013 வரை 122 கருத்துருக்கள் பெறப்பட்டு, 58 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன என துறை தெரிவித்தது.

45. இந்நிலையில் மீதமுள்ள கருத்துருக்களின் மீது துறை மேற்கொண்டுவரும் நடவடிக்கை மற்றும் அவற்றின் தற்போதைய நிலவரம் என்ன என்பதை குழு அறிய விரும்பியது.

46. சென்னையில் 30–12–2013 இல் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், இதற்கு கடந்த நவம்பர் 2013 இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி 58 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும், தற்போது 1,600 சங்கங்கள் நடைமுறையில் உள்ளன. மீதமுள்ள கருத்துருக்களின் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்றும், இன்னும் இரண்டு ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி சங்கங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிற்குத் தெரிவித்தார்.

47. 2013–2014 இல் அமைக்கப்படவேண்டிய எஞ்சியுள்ள 64 கூட்டுறவுச் சங்கங்களை விரைவாக அமைக்க நடவடிக்கை எடுத்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

IX பால் குளிரூட்டும் நிலையம்:

48. 2013–2014 இல் தமிழ்நாட்டில் பால் குளிரூட்டும் நிலையம் (Chilling Centre) அமைப்பதற்கான கருத்துருக்கள் பெறப்பட்டு அவைகள் மீது துறை மேற்கொண்ட நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

49. இதற்கு துறை **2013–2014** இல் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க கருத்துருக்கள் பெறப்படவில்லை என குழுவிடம் தெரிவித்தது.

50. தமிழ்நாட்டில் பால் குளிரூட்டும் நிலையம் அவசியம் அமைக்க வேண்டும் என கண்டறியப்பட்ட பகுதிகளில் அதன் சிறப்பினை எடுத்துக்கூறி கோரிக்கைகளைப் பெற்று நவீன முறையில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க துறை விரைவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

X பால் பண்ணைகளை நவீனப்படுத்துதல்:

51. தமிழகத்தில் பால் பண்ணைகளை நவீனப்படுத்த துறை மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை குழு அறிய விரும்பியது.

52. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் **2011–2012** இல் ரூ.**35.92** கோடியும், **2012–2013** இல் ரூ.**38.33** கோடியும் நடப்பாண்டில் இதுவரை ரூ.**13.37** கோடி செலவிலும் தமிழகத்தில் உள்ள பால் பண்ணைகள் நவீனப்படுத்தப்பட்டு வருவதாக துறை குழுவிற்குத் தெரிவித்தது.

53. தமிழகத்தில் 2013–2014 இல் எங்கெங்கு பால் பண்ணைகளை நவீனப்படுத்த உள்ளன என்ற விவரங்களை குழுவிற்கு தெரிவித்து தெரிவு செய்யப்பட்டவற்றை விரைவாக நடவடிக்கை எடுத்து பணிகளை நிறைவேற்ற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XI. பால் குளிர்விப்பான் மையம் அமைத்தல்

54. 2012–2013 ஆம் ஆண்டு தூய பால் உற்பத்தித் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் பிள்ளையார்குளத்தில் மொத்த பால் குளிர்விப்பான் மையத்தில் (Bulk Milk Cooler Unit) இயந்திரங்களை நிறுவிடவும், புதூர் மொத்த பால் குளிர்விப்பான் மையத்திற்கு இடம் தேர்வு செய்து கட்டடம் கட்டி இயந்திரங்களை நிறுவிடவும், மேலும் இந்த இரண்டு மையங்களும் இயங்குவதற்கு விரைவுபடுத்த துறை எடுத்துவரும் நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

55. 2012–2013 ஆம் ஆண்டு தூய பால் உற்பத்தித் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் பிள்ளையார்குளத்தில் மொத்த பால் குளிர்விப்பான் மையத்தில் இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகிறது என்றும் இந்த மையம் துவக்கப்பட உள்ளது எனவும் துறை குழுவிடம் தெரிவித்தது.

56. 2012–2013 இல் தூய பால் உற்பத்தித் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பிள்ளையார் குளத்தில் பால் குளிர்விப்பான் மையம் அமைக்கும் பணி நிறைவுபெற்று பயன்பாட்டிற்கு வந்தது குறித்து துறை அறிக்கை அனுப்புமாறு குழு பரிந்துரை செய்கிறது.

57. மேலும், புதூர் மொத்த பால் குளிர்விப்பான் மையம் நிறுவுவதற்கு தகுதியான இடம் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களிடமிருந்து தகுதியான இடம் கிடைத்தவுடன் மேற்படி மொத்த பால் குளிர்விப்பான் மையம் கட்ட ஆவன செய்யப்படும் என துறை குழுவிடம் தெரிவித்தது.

58. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள புதூரில் பால் குளிர்விப்பான் மையம் நிறுவுவதற்கு துறை துரித நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான இடத்தைப் பெற்று குளிர்விப்பான் மையம் நிறுவும் பணியை நிறைவு செய்வதற்கு துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

59. இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அச்சங்குளம், பாண்டியூர், விளங்குளத்தூர் மற்றும் வள்ளிமாடன்வலசை ஆகிய இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான் மையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை குழு அறிகிறது. மேலும் இப்பணி எப்போது நிறைவு பெறும் என்பதை துறையிடம் குழு கோரியது.

60. இதற்கு இம்மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அச்சங்குளம், பாண்டியூர், விளங்குளத்தூர் மற்றும் வள்ளிமாடன்வலசை ஆகிய இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான் மையங்கள் அமைக்கும் பணி லின்டல் வரை நடைபெற்றுள்ளன. கட்டுமானப் பணிகள் முடிவுற்றபின் பிப்ரவரி 2014–இல் செயல்படத் துவங்கும் என்பதை குழுவிற்குத் துறை தெரிவித்தது.

61.இராமநாதபுரம் மாவட்டத்தில் அச்சங்குளம், பாண்டியூர், விளங்குளத்தூர் மற்றும் வள்ளிமாடன்வலசை ஆகிய இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான் மையங்கள் அமைக்கும் பணிகள் நிறைவடைய துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

62. சிவகங்கை மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 மொத்த பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைக்க அனுமதி பெறப்பட்டு கற்களத்தூர், வாராப்பூர், மானாமதுரை மற்றும் பட்டமங்கலம் ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக துறை எடுத்துவரும் நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

63. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்படாததால் 2014–2015 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் சேர்த்து நிதி பெற்று பணிகளை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை துறை குழுவிற்கு தெரிவித்தது.

64. சிவகங்கை மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5000 லிட்டர் கொள்ளளவில் 4 பால் குளிர்விப்பான் நிலையங்கள் கற்களத்தூர், வாராப்பூர், மானாமதுரை மற்றும் பட்டமங்கலம் ஆகிய இடங்களில் அமைக்க 2014–2015 இல் உரிய நிதியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, இப்பணியை நிறைவு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XII. தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் பகுப்பாய்வுக் (Milk Analyser) கருவிகள் வழங்குதல்:

65. இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் பகுப்பாய்வுக் கருவிகள் (Milk Analyser) இரண்டு பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் வழங்கியுள்ளதாகவும் மற்ற சங்கங்களுக்கு இதுவரை வழங்கவில்லை என்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்து வழங்க உள்ளதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. மேலும் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய இரு மாவட்டங்களுக்கு பால் பகுப்பாய்வுக் கருவிகள் வாங்கி பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கு ரூ.6.2 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இவ்விரு மாவட்டங்களுக்கும் பால் பகுப்பாய்வுக் கருவிகள் வாங்கி வழங்குவது குறித்து துறை எடுத்துவரும் நடவடிக்கையை குழு அறிய விரும்பியது.

66. இதற்கு, துறை தேசிய வேளாண்மைத் திட்டத்தின்கீழ் 10 பால் பகுப்பாய்வுக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 20 பால் பகுப்பாய்வுக் கருவிகள் வழங்க ஆணை வழங்கப்பட்ட ஒரு நிறுவனம் ஒப்பந்த விதிகளின்படி கருவிகளை வழங்க தவறிவிட்ட காரணத்தினால் கொள்முதல் ஆணை ரத்து செய்யப்பட்டது. மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெற கடைசி தேதி 24-12-2013 விதிமுறைகளின்படி ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு, கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு சங்கங்களுக்கு வழங்கப்படும். மேலும் இப்பணி மார்ச் 2014 இல் நிறைவுபெறும் என்று குழுவிடம் துறை தெரிவித்தது.

67. இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு எஞ்சிய 20 பால் பகுப்பாய்வுக் கருவிகள் கொள்முதல் செய்து வழங்கி, பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XIII. சென்னை, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் வெண்ணெய் குளிரூட்டும் வசதி ஏற்படுத்துதல்:

68. 2013-2014 இல் சென்னை, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் வெண்ணெய் குளிரூட்டும் வசதி ஏற்படுத்தும் பணிகளின் நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

69. 2013-2014 இல் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் சென்னை, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் வெண்ணெய் குளிரூட்டும் வசதி அமைக்கும் பணி மார்ச் 2014-க்குள் நிறைவுபெறும் என துறை மூலம் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

70. சென்னை, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் தற்போது வெண்ணெய் குளிரூட்டும் வசதி அமைக்கும் பணி நிறைவுபெற துறை துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XIV. சங்க உறுப்பினர்களுக்கு பால் கறவை இயந்திரங்கள் வழங்கல்:

71. 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 இல் பால் கறவை இயந்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு கருவிகள் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு துறைமூலம் வழங்கப்பட்டுள்ளது குறித்து குழு அறிய விரும்பியது.

72. 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டில் பால் கறவை இயந்திரங்கள் மற்றும் புல்வெட்டும் கருவிகள் பெற அரசிடமிருந்து நிதி ஏதும் பெறப்படவில்லை என துறை குழுவிடம் தெரிவித்தது.

73. 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 இல் பால் கறவை இயந்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு கருவிகள் வாங்க அரசிடமிருந்து நிதி பெறப்படவில்லை என்பது குறித்து குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. இது குறித்து காரணத்தை குழுவிற்கு துறை அறிக்கையாக அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

XV. செயலிழந்த பால் கூட்டுறவுச் சங்கங்களைப் புதுப்பித்தல்:

74. தமிழ்நாட்டில் செயலிழந்த (dormant) பால் கூட்டுறவுச் சங்கங்களைப் புதுப்பிக்க துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாட்டினை குழு அறிய விரும்பியது.

75. இதற்கு, பால்வளத் துறையின் கட்டுப்பாட்டில் 25 சரக பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது என்றும், மொத்தமுள்ள 1,582 செயலிழந்த சங்கங்களைப் புதுப்பிக்க வேண்டி பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரையில் 101 பால் கூட்டுறவுச் சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்றும் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிற்கு தெரிவித்தார்.

76. பால் கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழக்கும்போது, அதற்கு புதிய தலைவர் பொறுப்பேற்று அதைத் தொடர்ந்து நடத்த முன்வந்து வங்கிகளில் கடன்பெற விண்ணப்பித்தால், ஏற்கெனவே பெற்ற கடன் பாக்கித் தொகையை முழுவதுமாக திருப்பிச் செலுத்திய பின்னரே கடன் வழங்கப்படும் என்று வங்கிகளில் தெரிவிப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு முன்பு இருந்த தலைவர் பணம் வசூல் செய்து கட்டாமல் விட்ட தொகையை புதிய தலைவர் பொறுப்பேற்கும்போது எவ்வாறு கட்ட இயலும்? இத்தகைய காரணங்களாலும் செயலிழக்கும் சங்கங்களை தொடர்ந்து செயல்படுத்த முன்வருவதில்லை. இத்தகைய நிகழ்வுகளில் துறைமூலம் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதை குழு துறையிடம் தெரிவித்தது.

77. இதுபோன்ற செயலிழந்த சங்கங்களை ஆய்வு செய்து, வகைப்படுத்தி, போதுமான உற்பத்தியாளர்கள் இல்லாதது காரணமா, நிதிப் பற்றாக்குறை காரணமா அல்லது கையாடல் செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இது குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்புவதாகவும் துறை தெரிவித்தது.

78. 2013–2014 இல் எஞ்சியுள்ள செயலிழந்த பால் கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்களை குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் எனவும் இவைகளைப் புதுப்பிக்க துறை துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

79. மேலும் இத்தகைய சங்கங்களில் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு மேலாக தணிக்கை செய்யப்படாத சூழ்நிலை இருந்தது. தற்போது தணிக்கை செய்ய முடுக்கிவிடப்பட்டு 2012–2013 ஆம் ஆண்டு வரை செய்து முடிக்கப்பட்டுள்ளது என அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

80. 10 ஆண்டுகளுக்கு மேலாக துறைமூலம் சங்கங்களில் தணிக்கை செய்யப்படாத சூழ்நிலையை குழு அறிகிறது. துரித நடவடிக்கை மேற்கொண்டு தணிக்கை செய்யப்பட வேண்டிய சங்கங்களில் தணிக்கையை முடித்து குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XVI. குளிர்பதன வசதி உள்ள வாகனங்கள் மற்றும் வெப்பத்தடை செய்யப்பட்ட வாகனங்கள் வாங்குதல்:

81. 7மெட்ரிக் டன் அளவுள்ள குளிர்பதன வசதி கொண்ட வாகனங்கள் (Refrigerated vehicles–2) மற்றும் 9 மெட்ரிக் டன் அளவுள்ள வெப்பத்தடை செய்யப்பட்ட வாகனங்கள் (Insulated vans–3) ஆகியன 2013–2014 இல் ரூ.1.21 கோடி மதிப்பீட்டில் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. இந்த வாகனங்கள் முழுவதும் வாங்குவதற்கு துறை எடுத்து வரும் நடவடிக்கையை குழு அறிய விரும்பியது.

82. 2013–2014 இல் குளிர்பதன வசதி கொண்ட இரண்டு வாகனங்களும் மற்றும் வெப்பத்தடை செய்யப்பட்ட வாகனங்கள் மூன்றும் வாங்குவதற்காக 5 வண்டிகளுக்கான சேஸ் வாங்கப்பட்டு பாடி கட்டுவதற்காக அக்ஸரா டிரான்ஸ் சிஸ்டம் (Akshra Trans System) கோயம்புத்தூருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், 2014 ஜனவரி 30–க்குள் முழுமையாக வாகனங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என குழுவிடம் துறை தெரிவித்தது.

83. 2013–2014 இல் குளிர்பதன வசதி கொண்ட இரண்டு வாகனங்களும் மற்றும் மூன்று வெப்பத்தடை செய்யப்பட்ட வாகனங்களும் கோயம்புத்தூரில் பாடி கட்டும் பணி நிறைவுபெற்று, முழுமையான வாகனங்களும் பெறப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுவிட்டதா என்பது குறித்த அறிக்கையினை குழுவிற்கு துறை அனுப்பிவைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XVII. திருச்சி பால் பண்ணையில் பால் குளிர்விப்பு மற்றும் நவீன சுத்திகரிப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

84. திருச்சி பால் பண்ணையில் பால் குளிர்விப்பு மற்றும் நவீன சுத்திகரிப்பு வசதிகள் அமைக்க 2013–2014 இல் ரூ.1.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, துறை எடுத்துவரும் நடவடிக்கையை குழு அறிய விரும்பியது.

85. இது தொடர்பாக துறை மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை பின்வருமாறு குழுவிடம் தெரிவித்தது:

வ. எண்	நிதி ஒதுக்கீடு விவரம்	எண்ணிக்கை	ரூபாய் (இலட்சங்களில்)	மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் விவரம்
1.	திருச்சி மத்திய பண்ணையில் இரண்டு அடுக்கு தானியங்கி முறையில் இயந்திரங்கள் சுத்தம் செய்யும் சி.ஐ.பி. சிஸ்டம் நிறுவுதல்.	ஒன்று	75.00	இயந்திரம் கொள்முதல் செய்யவும், கட்டுமானப் பணிக்கும் திருச்சி ஒன்றியத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.
2.	திருச்சி மத்திய பண்ணையில் 225 டி.ஆர். அட்மாஸ்பியரிக் கண்டன்சர் யூனிட் நிறுவுதல்	ஒன்று	85.00	இணையம் மூலம் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு இயந்திரங்கள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகிறது.
3.	திருச்சி மத்திய பண்ணையில் பவர் பேக்கப் வசதிகள் செய்தல்	ஒன்று	30.00	750 K.V.A. மின்னாக்கி இயந்திரம் கொள்முதல் செய்திட திருச்சி ஒன்றியத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

86. திருச்சி பால் பண்ணையில் **2013–2014** இல் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் பால் குளிர்விப்பு மற்றும் நவீன சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் நிறைவடைய துறை விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XVIII. கிருஷ்ணகிரி பால் பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

87. 2012–2013 இல் ரூ.2.70 கோடி செலவில் கிருஷ்ணகிரி பால் பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணி நிறைவு பெற்று மாதிரி ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை குழு அறிகிறது.

88. கிருஷ்ணகிரி பால் பண்ணையில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு மாதிரி ஓட்டப் பணிகள் நிறைவு பெற்றது குறித்து அறிக்கை ஒன்றை குழுவிற்கு அளிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XIX. சோழிங்கநல்லூர் பால் பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்:

89. 2012–2013 இல் சோழிங்கநல்லூர் பால் பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.1.72 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருவதை குழு அறிய விரும்பியது.

90. சோழிங்கநல்லூர் பால் பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி துவங்கி பொருட்கள் வாங்கி நிறுவும் பணி நடைபெற்று வருகிறது என்பதை துறை குழுவிற்கு தெரிவித்தது.

91. 2012–2013 இல் சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் நிறைவு பெற்றது குறித்து துறை அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XX. தூய பால் உற்பத்தித் திட்டம்:

92. தூய பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நிதி உதவிமூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.103.67 இலட்சம் அனுமதிக்கப்பட்டு ரூ.88.32 இலட்சத்திற்கு தூய பால் உற்பத்திக்கான இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதையும் மீதமுள்ள நிதி ரூ.15.35 இலட்சம் மூலம் நிலுவையிலுள்ள பணிகளை மேற்கொள்ள துறை எடுத்துள்ள நடவடிக்கையினையும் குழு அறிய விரும்பியது.

93. மத்திய அரசின் தூய பாலுற்பத்தித் திட்டத்தை திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் 2006–2007 முதல் 2009–2010 வரை செயல்படுத்த மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது எனவும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.127.17 இலட்சம் ஆகும். மேலும் இதில் மத்திய அரசின் பங்கு ரூ.103.67 இலட்சமும், திண்டுக்கல் ஒன்றியத்தின் பங்கு ரூ.23.5 இலட்சமும் ஆகும்.

94. இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு 2006–2007, 2007–2008, 2008–2009 ஆம் ஆண்டிற்கு முறையே ரூ.19.81, ரூ.34.30, ரூ.34.21 இலட்சங்கள் விடுவித்துள்ளது. மத்திய அரசிடம் பெறப்பட்ட ரூ.88.32 இலட்சம் இத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டு பயன்பாட்டுச் சான்றிதழ் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2009–2010 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் நிதி ரூ.15.35 இலட்சம் விடுவிக்க மத்திய அரசால் கூடுதல் விளக்கங்கள் கேட்கப்பட்டு, பதில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.15.35 இலட்சம் இந்த நிதியாண்டில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதி கிடைக்கப் பெற்றவுடன் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்படும் என துறை குழுவிற்கு தெரிவித்தது.

95. தூய பால் உற்பத்தித் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதி உதவியில் மீதமுள்ள ரூ.15.35 இலட்சத்தை இந்த நிதியாண்டில் பெற துரித நடவடிக்கையை துறை மேற்கொண்டு திட்டப் பணிகளை முழுமையாகச் செயல்படுத்தி நிறைவு செய்து அறிக்கையினை குழுவிற்கு அளிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

96. மத்திய அரசிடம் தூய பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும் சேலம் ஒன்றியத்திற்கு **14.35** கோடி ரூபாய் மற்றும் தஞ்சாவூர் ஒன்றியத்திற்கு **2.19** கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட வரைவுகள் மைய அரசின் ஒப்புதலுக்கு எப்போது அனுப்பப்பட்டது என்றும் இதன் தற்போதைய நிலையையும் குழு அறிய விரும்பியது.

97. சேலம் ஒன்றியத்தில் தூய பால் உற்பத்தித் திட்டதினை செயல்படுத்திட **14.35** கோடி ரூபாயில் கருத்துரு தயார் செய்யப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்காக கடந்த **21–10–2011** அன்று மாநில அரசால் மைய அரசிற்கு அனுப்பப்பட்டது. இது தொடர்பாக, மத்திய அரசு சில கேள்விகளுக்குப் பதிலை அனுப்பும்படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இணையத்தின் சார்பாக மத்திய அரசுக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் இக்கருத்துருக்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என துறை குழுவிடம் தெரிவித்தது.

98. தஞ்சாவூர் மற்றும் சேலம் ஒன்றியங்களில் தூய பால் உற்பத்தித் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கருத்துருக்களுக்கு ஒப்புதல் பெற துறை துரித நடவடிக்கை மேற்கொண்டு மத்திய அரசின் நிதி உதவியைப் பெற்று திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXI. "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டம்:

99. மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையங்கள் புனரமைப்பிற்கு **2011–2012** இல் காஞ்சிபுரம், திருவள்ளூர் ஒன்றியங்களுக்கு ரூ.**40.18** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதிமூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒன்றியம் வழங்க வேண்டிய பால் நிலுவைத் தொகை (Old dues) வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது என்பதை குழு அறிகிறது.

100. பால் பணம் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு என்பதையும், இத்தொகையை இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்குத் துறை மேற்கொண்டுள்ள நடவடிக்கையினையும் குழு அறிய விரும்பியது.

101. காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஒன்றியமானது திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

102. மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் 'கூட்டுறவுகளுக்கு உதவுதல்' புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையங்கள் புனரமைப்பிற்கு **2011–2012** முதல் **2014–2015** வரை காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஒன்றியத்திற்கு மொத்தம் ரூ.**387.90** இலட்சம் (**2011–2012**–க்கு ரூ.**170** இலட்சமும், **2012–2013**–க்குரூ.**170** இலட்சமும் மற்றும் **2013–2014**–க்கு ரூ.**47.90** இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் **2011–2012**–க்கான ரூ.**170** இலட்சத்திலிருந்து முதல் தவணையாக ரூ.**40.18** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.**129.82** இலட்சம் (மத்திய அரசு ரூ.**64.19** இலட்சம், மாநில அரசு ரூ.**64.91** இலட்சம்) வழங்கக் கோரி மத்திய அரசிற்கு நினைவூட்டுக் கடிதம் வைக்கப்பட்டுள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

103. மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 2011–2012 இல் காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஒன்றியத்திற்கு வழங்கவேண்டிய ரூ.170 இலட்சத்தில் மீதமுள்ள தொகையான ரூ.129.82 இலட்சம் (மத்திய அரசு ரூ.64.19 இலட்சம், மாநில அரசு ரூ.64.91 இலட்சம்) வழங்கக் கோரி மத்திய அரசை வலியுறுத்தி துரித நடவடிக்கையை மேற்கொண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒன்றியத்தால் வழங்கப்பட வேண்டிய பால் பண நிலுவைத் தொகையை விரைவாக வழங்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

104. நீலகிரி மாவட்டத்தில் "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.7.17 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கையை மத்திய அரசின் ஒப்புதலுக்கு துறை எப்போது அனுப்பியது எனவும், இதன் தற்போதைய நிலையினையும் குழு அறிய விரும்பியது.

105. நீலகிரி மாவட்டத்தில் "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.7.17 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு தேசிய பால்வள வாரியம்(NDDB) மூலம் 7–3–2012 அன்று அனுப்பப்பட்டது. இக்கருத்துரு மத்திய அரசிற்கு 12–3–2012 அன்று கிடைக்கப்பெற்றதால் 2011–2012–க்கான ஒப்புதல் வழங்க இயலாது என்றும் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி கருத்துரு கிடைப்பதற்குள் உபயோகப்படுத்தப்பட்டுவிட்டது என்றும் மத்திய அரசின் கடித எண் 20–8–2012-DP நாள் 28–5–2013 மூலம் குறிப்பிடப்பட்டது என்பதை துறை மூலம் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

106. குழு நீலகிரி மாவட்டத்தில் "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் கருத்துரு மீது மத்திய அரசிடம் விரைவாக ஒப்புதல் பெற்று பணியை மேற்கொள்ள துரித நடவடிக்கையினை துறை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXII. தேசிய உணவு பதப்படுத்தும் முனைப்பகத் திட்டம்:

107. திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தேசிய உணவு பதப்படுத்தும் முனைப்பகத் திட்டத்தின்கீழ் பால் பண்ணைகளில் பால் குளிர்விப்பு வசதிகள் மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணிகளுக்குத் திட்ட மதிப்பீடுகள் துறை மூலம் தேசிய உணவு பதப்படுத்தும் முனைப்பகத்திற்கு எப்போது அனுப்பப்பட்டது என்பதை குழு அறிய விரும்பியது.

108. தேசிய உணவு பதப்படுத்தும் திட்டத்தின் கீழ் திருச்சியில் ரூ.142.00 இலட்சம், சேலத்தில் ரூ.320.00 இலட்சம் மற்றும் மதுரையில் ரூ.553.00 இலட்சத்தில் பால் பண்ணை குளிர்விப்பு வசதிகள் மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணிகளுக்குரிய கருத்துருவிற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதை துறை குழுவிடம் தெரிவித்தது.

109. திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பால் பண்ணை குளிர்விப்பு வசதிகள் மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணிகளைத் துவங்கி விரைவான நடவடிக்கையை மேற்கொண்டு பணிகள் நிறைவுபெற்றது குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்பிவைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXIII. உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய அலுவலர் நியமனம் செய்தல்.

110. குழந்தைகள் உட்பட அனைத்து தரப்பு மக்களாலும் பயன்படுத்தப்படும் பால் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருத்தல் வேண்டும். தமிழகத்தை பொறுத்த அளவில் ஒரு நாளைக்கு 187 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. அதில் 30 இலட்சம் லிட்டர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 72 இலட்சம் லிட்டர் பால் தனியார் பால் பண்ணைகளுக்கு செல்கிறது. இதில் ஆவின் பால் மூலம் 21 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. தனியார் பால் பண்ணை மூலம் சுமார் 35 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. இந்த பாலின் தரம் நிர்ணயம் செய்ய துறை மூலம் கண்காணிக்க போதிய அமைப்பு தேவையான அளவு இல்லை எனத் தெரிகிறது.

111. இது குறித்து துறை கருத்து தெரிவிக்கும் போது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006ம் ஆண்டு கொண்டுவரப்பட்டாலும், சமீபத்தில் தமிழகத்தில் அமுல்படுத்தி இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

112. உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 (Food Safety and Standards Act, 2006) இன் கீழ் மத்திய சுகாதார அமைச்சக அறிவுரைக்கு ஏற்ப ஒரு ஆணையரோ அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு ஒரு அலுவலரையோ தனியார் பால் பண்ணைகளையும் அவைகளின் பாலின் தரத்தையும் பரிசோதிப்பதற்கு நியமிப்பதன் மூலம் தவறுகளை குறைக்க இயலும் என்றும் துறை தெரிவித்துள்ளது. மேலும் இது குறித்து துறை நடவடிக்கை எடுத்த போது பால் தரப் பரிசோதனை தொடர்பாக இத்துறையின் பால் வளத்துறை ஆணையருக்கு அடுத்த நிலையில் உள்ள உரிய தொழில்நுட்ப கல்வி தகுதி உள்ள இரண்டாம் நிலை அலுவலரைத் Designated Officer ஆக தெரிவு செய்து அனுப்ப கோரியுள்ளதாக குழு அறிந்ததது.

113. மேலும் இவ்வாறு அனுப்பப்படும் அலுவலர் ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டிலும் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத் துறையின் செயற் கட்டுப்பாட்டிலும் செயல்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இருநிலை கட்டுப்பாடு குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக துறை தெரிவித்துள்ளது. ஆனால் ஏற்கெனவே இப்பணிகளை கவனிக்க பால்வளத்துறையில் துணை பால் ஆணையர், பால்வளம் இருந்ததாகவும் பின்னர் இது குறித்து பணி விதிகள் இயற்றப்பட்ட நிலையில் தகுந்த தொழில் நுட்ப கல்வி பெற்ற அலுவலவர் இத்துறையில் இல்லாத காரணத்தால் அந்த பதவி கலைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

114. எனவே, இத்துறையில் தொழில்நுட்பக்கல்வி பெற்ற ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு மேல் இத்துறையில் பணி புரிந்து அனுபவம்மிக்க அலுவலர் இருக்கும் பட்சத்தில், இப்பதவியினை மீட்டுருயிர்பித்து, இப்பணியினை செய்வது வசதியாக இருக்கும் என்று குழு கருதுகிறது. எனவே தனியார் பால் பண்ணைகளையும் அவைகளின் பாலின் தரத்தையும் நிர்ணயம் செய்யவும் அவ்வப்போது சோதனை செய்யவும் ஆய்வுகள் நடத்தவும் ஏதுவாக இருக்கும் எனவும் குழு கருதுகிறது.

115. இத்துறையின் பணியிலிருக்கும் பணிமூப்பு பெற்ற மூத்த அலுவலர் ஒருவரை அவர் தொழில்நுட்ப கல்வி தகுதியுடையாராக இருப்பின் Designated Officer ஆக பணி நியமனம் செய்து அவர்களை வைத்து தர நிர்ணயம் செய்ய வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

XXIV. தனியார் பால்பண்ணை உரிமையாளர்களுக்கு உரிமம் (Licence) வழங்குதல்:

116. வெளி மார்க்கெட்டிலிருந்து பால் கொள்முதல் செய்பவர்களுக்கு என்று தனியாக உரிமம் (Licence) வழங்கப்பட்டதா, அவ்வாறு உரிமம் வழங்குவதற்கு விதிமுறை மற்றும் வழிமுறைகள் உள்ளதா எனவும் அவர்களை துறை எவ்வாறு பரிசோதனை மேற்கொள்கிறது என குழு அறிய விரும்பியது.

117. இது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 (Food Safety and Standards Act, 2006) இல் வருகிறது. எனவே, இதில் துறை எதுவும் செய்ய முடியாது என ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

118. குழு இதை ஏன் அறிய விரும்புகிறது என்றால் வெளியிலிருந்து பாலினை வாங்கி விற்பனை செய்பவர்களுக்கு உரிமம் கொடுக்க வேண்டும் என்று உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம், 2006 இல் இருக்கிறது. இது மத்திய அரசு சட்டம். இதற்கென சில வரைமுறைகள் வகுக்கப்பட்டிருக்கிறது. அதை துறை பின்பற்றுவதில்லை. அதற்கான காரணம் மற்றும் கணக்காய்வுத் தலைவரின் தணிக்கை மறுப்புரைகள் (Audit objections) உள்ளனவா என்பதை குழு அறிய விரும்பியது.

119. இதற்கு, இதில் இவ்வளவு பால் என்று லிமிட் இருக்கிறது. மேலும், இது சுகாதாரத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்கிறார்கள். அவர்களுக்கு உரிமம் கொடுத்துதான் ஆக வேண்டும். இதனை துறைமூலம் செயல்படுத்துவோம் என ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

120. தனியார் வசம் உள்ள பால் பண்ணைகளுக்கு உரிமம் கொடுத்து அவர்களை துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம். இதனால் அரசுக்கு வருவாய் அதிகரிக்கும். அவர்களும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு கொள்முதல் வகையில் ஒரு ஒழுங்குமுறை இருக்கும் என குழு துறையிடம் தெரிவித்தது.

121. தமிழ்நாட்டில் தனியார் பால் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு என்று உரிமம் தருவதற்கு உரிய நடவடிக்கைகளை துறை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXV. தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்:

122. தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, சேலம் மற்றும் திருச்சி ஆகிய நான்கு இடங்களில் அமைக்கப்பட்ட ஆவின் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் சென்னையைத் தவிர மற்ற இடங்களில் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் இயங்கவில்லை. இதற்கு போதுமான தொழில்நுட்பப் பணியாளர்கள் இல்லை என்றும், மேலும் சென்னையில் நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் ஒன்று செயல்படுவதாகவும், அது வேலூர், விழுப்புரம் போன்ற இடங்களுக்குச் செல்லக்கூடிய வகையில் செயல்படுகிறது என்றும் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிற்குத் தெரிவித்தார்.

123. இந்த நான்கு ஆய்வகங்களை அமைக்க அரசு கோடிக்கணக்கான பணத்தை செலவழித்திருப்பதாகவும், இயந்திரங்களும் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளதாகவும், மிகக் குறைந்த காலத்தில் அனைத்து ஆய்வகங்களையும் உடனடியாகச் செயல்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு துறையிடம் தெரிவித்தது.

124. சென்னையில் 30–12–2013 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள், இந்த தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் செயல்பட நடவடிக்கை எடுப்பதாகவும், பணியாளர்களைப் பொறுத்தவரையில் இப்போது இணையத்தில் (Federation) 2013 ஆம் ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 189 பணியாளர்கள் வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற உள்ளதாகவும், அடுத்த ஆண்டு 177 பேர் ஓய்வு பெற உள்ளதாகவும், இதனால் வேலைவாய்ப்புத் துறையின் மூலம் 8,000 பேர் தேர்ந்தெடுக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குழுவிடம் தெரிவித்தார்.

125. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பணியாளர்களை எவ்வாறு தேர்வு செய்வது என்பது குறித்து சில விளக்கங்கள் கேட்கப்பட்டதாகவும், தேர்வுக் குழு (H.R. Committee) ஒன்றை 17–12–2013 மற்றும் 18–12–2013 அன்று கூட்டப்பட்டு, அதில் பணியாளர்கள் தேர்வு செய்வது குறித்து முடிவு செய்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு விளக்கங்கள் கொடுத்துள்ளதாகவும் அவர் குழுவிடம் மேலும் தெரிவித்தார்.

126. தமிழகத்தில் பால்வளத் துறையின்கீழ் இயங்கி வரும் நான்கு தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்குத் தேவையான பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்பப் பணியிடங்களை கூடுதலாக உருவாக்கி, உடனடியாகப் பணியாளர்களை பணியில் அமர்த்தி அனைத்து ஆய்வகங்களையும் நல்ல நிலையில் இயங்கச் செய்ய துறை விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு இது குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

127. மேலும், சென்னையில் நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் **(Mobile Quality Control Laboratory)** உள்ளதைப் போன்று, மாவட்டத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXVI. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தனியாக பால் கூட்டுறவுச் சங்கம்:

128. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு பால் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகம் இல்லையென குழு அறிகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தனியாக பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க இயலுமா என குழு அறிய விரும்பியது.

129. இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் உற்பத்தி மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, அங்கு பால் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டு வந்தால் இலாபகரமாக செயல்பட முடியாது. மேலும், இராமநாதபுரத்தில் தொழிற்சாலைகள் இல்லை. இந்த மாவட்டத்தில் முதலில் கலப்பின வகை (High Breed) மாடுகள் வளர்க்கவும், அதன்மூலம் பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதன்பிறகு பால் கூட்டுறவுச் சங்கம் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிற்கு தெரிவித்தார்.

130. பால் குளிரூட்டும் நிலையங்களில் எவ்வளவு பால் சேமித்து வைக்கமுடியும் என்பதை குழு மேலும் அறிய விரும்பியது.

131. 50,000 லிட்டர் பால் சேமித்து வைக்கமுடியும். கமுதி யூனியனிலிருந்து சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற இடங்களுக்கு பால் கொண்டுவர 2002 இல் 30 இலட்சம் ரூபாய் நிதி முதலீடு செய்யப்பட்டது. மேலும், அங்கு மழை பெய்தால் மட்டும் கால்நடை தீவனமான புல் வளரும். அதனால், மற்ற காலங்களில் கால்நடை தீவனமான புல் கிடைக்காததால் பால் கிடைப்பது மிகவும் சிரமம் என்று அரசு செயலாளர் அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

132. இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும், சுற்றுலாத் தலங்கள் நிறைய உள்ள பகுதியாக இருப்பதாலும், பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்கள் மிகுந்த மாவட்டமாக இருப்பதாலும், அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கென தனியாக பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க துறை ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXVII. நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட கறவை மாடுகள் வாங்க நடவடிக்கை:

133. அரசின் சார்பில் விலையில்லா கறவை மாடு வாங்க ரூ.30,000/– வழங்கப்படுகிறது. ஆனால், ஒரு நாளைக்கு 10 லிட்டர் பால்கூட உற்பத்தியாகவில்லை. குஜராத் மாடுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இருப்பதால், அதிக பால் கறக்கிறது. அந்த மாடுகளை குஜராத்திலிருந்து விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்காக துறை ஏன் வாங்கக்கூடாது என குழு அறிய விரும்பியது.

134. தமிழ்நாட்டில் காங்கேயம், உம்பளாச்சேரி போன்ற நாட்டின மாடுகளில் பால் உற்பத்தி குறைவு. குஜராத்தில் உள்ள மாடுகள் இயற்கையிலேயே நோய் எதிர்ப்பு சக்தியுடன் அதிக பால் சுரக்கக் கூடியதும் ஆகும். ஜெர்சி இன நாட்டு மாடுகளை வாங்கலாம் என்றால் அதற்கும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் விவசாயிகளுக்குத்தான் இழப்பு. அதனால் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) மூலம் ஆராய்ச்சி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளோம் என்று கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் குழுவிற்குத் தெரிவித்தார்.

135. குழுவின் கருத்தினை துறை பரிசீலித்து நல்ல நோய் எதிர்ப்பு சக்திகொண்ட, அதிக பால் கொடுக்கும் மாடுகளை வாங்கவும், அதன்மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கவும், துறை உரிய நடவடிக்கையினை எடுக்கவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXVIII. பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதி:

136. திண்டுக்கல் மாவட்டத்தில் பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க இடவசதி இல்லையென்றும், அதற்கான கருத்துரு துறையிடம் ஏதும் இல்லையென்றும் துறை தெரிவித்தது. திண்டுக்கல் மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் அங்கு பால் உற்பத்தியும் அதிகம். அதுபோல் பால் விற்பனையும் அதிகமாக இருக்கிறது. எனவே, இதுகுறித்து துறை முயற்சி செய்து வேறு மாற்று இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென துறையிடம் குழு கேட்டுக்கொண்டது.

137. குழுவின் கருத்து குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கிறோம் என்று அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிடம் உறுதி அளித்தார்.

138. திண்டுக்கல் மாவட்டத்தில் பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவையான 10 ஏக்கர் நிலத்தைப் பெற துரித நடவடிக்கையை எடுத்து நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

139. குழு, ஆய்வுப்பணத்தின் போது, வேலூர் பால்பண்ணை 4.0 ஏக்கர் பரப்பளவில் இயங்கி வருகிறது என்றும், பால்பண்ணையின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் முக்கியமாக பால் உப பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு போதிய இடவசதி இல்லை என்றும், மேலும் பால் பண்ணையை விரிவாக்கம் செய்ய வேலூருக்கு அருகில் தண்ணீர் வசதியுள்ள நிலம் 10 ஏக்கர் ஒதுக்கீடு செய்து தருமாறு குழுவிடம் துறை மூலம் கோரிக்கை வைக்கப்பட்டது.

140. வேலூர் பால்பண்ணையின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் பால் உபபொருட்களை உற்பத்தி செய்யும் பிரிவிற்கு போதிய இடவசதியை ஏற்படுத்த வேலூருக்கு அருகில் நீர்வசதியுள்ள 10 ஏக்கர் நிலத்தை தெரிவு செய்து பால்பண்ணைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு துறை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXIX. வேடசந்தூர் தொகுதியில் மூடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் இயங்கச் செய்தல்:

141. திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் 50 பால் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன என்றும், ஏதோ காரணத்தினால் சங்கங்கள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு தற்போது ஒரு சங்கம்கூட இயக்கத்தில் இல்லை என்றும், ஆனால் அங்கு பால் உற்பத்தி அதிகமாக இருப்பதாகவும், அதுபோல் பால் கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என்பதை குழு அறிகிறது.

142. திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் செயல்பட்ட 50 பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டதற்கான காரணத்தை ஆய்வு செய்து, இத்தகைய சங்கங்களை அங்கு மீண்டும் இயங்கச் செய்வதற்கு துறைமூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXX. அரசின் மானியங்கள் ஆவின் நிறுவனத்திற்கு சென்றடைய நடவடிக்கை:

143. அரசு வேளாண்மைத் துறைக்கு 7,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது போல் பால் வளத் துறைக்கு 10,000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்துறை ஒருங்கிணைந்த துறையாக (Allied Sector) ஆக இல்லாமல் ஒரு பிரதான துறையாக (Main Sector) ஆக கொண்டுவர வேண்டும் என்று அரசுச் செயலாளர் அவர்கள் சென்னையில் 30–12–2013 இல் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

144. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை என ஒருங்கிணைந்த துறையாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் பால் வளத்தை தமிழ்நாட்டில் மேம்படுத்தும் விதமாக பால் வளத் துறையை தனியாக பிரதான துறையாக தரம் உயர்த்த ஆய்வு மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

145. ஆவின் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறைவாக இருந்ததன் காரணமாகத்தான், தனியார் பால் பண்ணைகள் வளர்வதற்கு முக்கிய காரணமாக ஆகிவிட்டது. இத்துறையின் செயல்பாடுகள் 20 சதவிகிதம், 30 சதவிகிதம் என்று சொன்னால், தனியார் நிறுவனங்களின் வளர்ச்சி, இதைவிட அதிகமாக எங்கேயோ போய்விட்டார்கள். எனவே, இதனைக் கருத்தில்கொண்டு இத்துறையின் செயல்பாடுகளை மேலும் அதிகமாக்க வேண்டுமென குழு துறையிடம் வலியுறுத்தியது.

146. மேலும், பால் வளத் துறைக்கென்று மத்திய அரசும், மாநில அரசும் கோடிக்கணக்கான தொகையை மானியமாக வழங்குகிறது. இந்த நிதியை தனியார் அனுபவிப்பதை துறை தடுத்திடவேண்டும். இத்தகைய உதவிகள் அனைத்தும் அரசு நிறுவனங்களுக்கும், ஆவின் நிறுவனத்திற்கும் சென்று அடைய உரிய நடவடிக்கைகளை துறை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

147. தனியார்கள் அனைவரும் ஒரு குழுவாக நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய புதிய இயந்திரங்கள் மற்றும் பணியாட்களை அதிகம் வைத்து செயல்படுகிறார்கள். *தனியார் நிறுவனத்தினர் பொது மக்களிடம் பால் சேகரிப்பாளர்களை அனுப்பி, அவர்கள் இல்லங்களுக்கே சென்று* பாலினை கொள்முதல் செய்து, பால் விற்பனையை அதிகரிக்கிறார்கள். அதற்கேற்ப அவர்களுக்கு இலாபமும் வருகிறது என்று அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

148. பால் வளத் துறையும் தனியார் நிறுவனங்கள் செயல்படுவது போல் பாலினை கொள்முதல் செய்து, பால் விற்பனையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXXI. விலையில்லா கறவை மாடுகள் மூலம் கிடைக்கிற பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கே கிடைக்க வழிவகை செய்தல்:

149. அரசு மூலம் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் துறை 30,544 மாடுகள் வழங்கியுள்ளதாகவும், வருகின்ற 2014 மார்ச் மாதத்திற்குள் மேலும் 30,000 மாடுகள் வழங்கவுள்ளதாகவும் சென்னையில் 30–12–2013 இல் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

150. இத்திட்டத்தின் மூலம் கறவை மாடுகள் பெற்ற சிலர் பாலினை வெளிச் சந்தையில் விற்றுவிடுகிறார்கள். அவ்வாறு விற்பனை செய்வதை துறையே கண்டறிந்து அதனை தடுப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் வெளிச் சந்தையில் விற்பனை செய்வதைத் தடுத்தால் இன்னும் கொஞ்சம் கொள்முதல் அளவு அதிகரிக்கும் எனவும் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிற்கு விளக்கினார்.

151. நூறு சதவிகிதம் பால் கொள்முதலை சொசைட்டிகளிலிருந்து பெற வேண்டும் என்று குழு வலியுறுத்தியது. துறை இவ்விஷயத்தில் முழு கவனம் செலுத்தி அரசு மூலம் விலையில்லாமல் வழங்கப்படும் கறவை மாடுகள் மூலம் கிடைக்கின்ற பால், அரசு நிறுவனத்திற்கே வரவேண்டும் என்ற வகையில் செயல்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXXII. பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க எளிமையான விதிமுறைகள் உருவாக்குதல்:

152. தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லையோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதோ, அங்கு புதிதாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டும் என குழு துறையிடம் தெரிவித்தது.

153. தமிழ்நாட்டில் எந்தெந்த பகுதிகளில் விலையில்லாக் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளில் பாலினைக் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக, பால் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கும்போது தேவையான விதிமுறைகளை எளிமைப்படுத்தி மேற்கொள்ள அடையாளம் கண்டு, இவர்களுக்கு ஊதியம் எவ்வாறு வழங்குவது என முடிவெடுத்து, அதன்பின்னர் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXIII. பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவையில்லாது பால் பணம் பட்டுவாடா செய்தல்:

154. தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய பால் பணத்தை உரிய காலத்திற்குள் நிலுவை இல்லாது துறை பட்டுவாடா செய்து வருகிறதா எனவும், இதுவரையில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற நிலையை குழு அறிய விரும்பியது.

155. முந்தைய காலங்களில் பாலின் கொள்முதல் விலையைவிட விற்பனை விலை குறைவாக இருந்ததால் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வந்தது. அதனால்தான் இரண்டு அல்லது மூன்று மாதங்களில்கூட பால் பணம் பட்டுவாடா செய்ய முடியாத நிலை இருந்தது. ஆனால், இப்பொழுது சூழ்நிலை மாறியிருக்கிறது. கொள்முதல் விலையைவிட விற்பனை விலை அதிகமாக இருப்பதால், அச்சங்கங்கள் இலாபகரமாகச் செயல்படுகின்ற நிலை ஏற்பட்டு, பால் உற்பத்தியாளர்களுக்கு 10 நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது என அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

156. கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வரத்து குறைவதற்குக் காரணமே உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்படாததுதான் என்றும், தருமபுரி மாவட்டத்தில் 7 கோடி ரூபாய் பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும், துறை மூலம் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு கொடுத்த பிறகும், அங்கு இன்னும் நிலைமை சரியாகவில்லை என்பதை குழு அறிகிறது. குழு, இந்த மாவட்டத்தில் ஆய்வு செய்தபோது குழுவிற்குக் கிடைத்த தகவலின்படி உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்திலிருந்து பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகள் கொடுப்பதற்காக நிதியை வேறு பணிக்கு மாற்றம் செய்யப்பட்டதுதான் காரணமாகத் தெரிவிக்கப்பட்டது.

157. மேலும், தருமபுரியிலே அந்த யூனிட்டை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு அரசு 7 கோடி ரூபாய் கொடுத்தும், அந்த யூனிட்டை புதுப்பிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன என்பதை குழு அறிய விரும்பியது.

158. ஒரு மாவட்டத்தில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்க வேண்டுமென்றால், அங்கே உள்ளூர் விற்பனை நிறைய இருக்க வேண்டும். ஆனால், தருமபுரியைப் பொறுத்தவரையில் அங்கே 1.30 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்கிறார்கள். ஆனால், அங்கு உள்ளூர் விற்பனை என்பது கிட்டத்தட்ட 26,000 முதல் 27,000 லிட்டர் வரைதான் இருக்கிறது. இங்கு விற்பனைக்கான சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கிறது என்று ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

159. மேலும், தருமபுரியில் உள்ளூர் விற்பனை போக, மீதியுள்ள பாலினை சென்னைக்குக் கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் பாலுக்குக் கொடுக்கும் விலையைவிட கேரளாவிலே நல்ல விலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தருமபுரியில் உற்பத்தி செய்யப்படும் பாலில், 80 முதல் 90 சதவிகிதமான பால் கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படுகிறது. தற்போது அதன் காரணமாக கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக தருமபுரி யூனியன் ஒரளவு இலாபம் ஈட்டியிருக்கிறது என்று ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

160. தமிழ்நாட்டில் உள்ள தருமபுரி நீங்கலாக பிற 16 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களைச் சார்ந்த அனைத்து சங்கங்களுக்கும் 7 முதல் 10 தினங்களுக்கு ஒரு முறை பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருவதாகவும், பால் பணம் பட்டுவாடா செய்ய சிரமப்படும் ஒன்றியங்களின் நிதிநிலையை ஆய்வு செய்து வாரந்தோறும் பால் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று துறை குழுவிடம் தெரிவித்தது.

161. தருமபுரி ஒன்றியத்தில் பால் பணம் பட்டுவாடா உரிய காலத்தில் நிலுவை இல்லாது வழங்க ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மற்றும் பால் பணம் பட்டுவாடா செய்ய சிரமப்படும் ஒன்றியங்களைப் புனரமைக்க துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXIV. பால் உபபொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை:

162. 2013–2014–இல் பால் உபபொருட்களின் தரத்தினை மேம்படுத்தி, விற்பனையை அதிகரிக்க துறை எடுத்துவரும் நடவடிக்கையினையும், பால் உபபொருட்களை வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு துறை முயற்சி மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதா என்பதையும் குழு அறிய விரும்பியது.

163. 2013–2014–இல் பால் உபபொருட்களின் தரத்தினை மேம்படுத்தி விற்பனையை அதிகரிக்க அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகிறது. வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்கீழ் உள்ள திருவண்ணாமலையில் புதிதாக பால் பவுடர் தயாரிக்கும் இயந்திரம் நிறுவப்பட்டு கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

164. பால் உற்பத்தி அதிகரிக்கும் சமயங்களில் உபரியான பால், பால் உபபொருட்கள் தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. தற்போது பால் உபபொருட்களின் உற்பத்தி நமது மாநில தேவைக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. உபரியாக இருக்கும்போது மட்டுமே சூழ்நிலைக்கேற்ப வெளிமாநிலங்களுக்கு பால் உபபொருட்களை அனுப்புவது குறித்து முடிவெடுக்கப்படும் என்பதையும் குழுவிடம் துறை தெரிவித்தது.

165. தமிழகத்தில் ஆவின் பாலுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. தருமபுரியில் மிச்சமாகின்ற பாலினை துறை கேரளாவிற்கு அனுப்பாமல், அதை வைத்துக்கொண்டு பால் உபபொருட்களான வெண்ணெய், நெய், பால் பவுடர், தயிர், மோர், யோகார்ட், ஐஸ்கிரீம், குலோப்ஜாமுன், பாதாம்பவுடர், மைசூர்பாக், இனிப்பு பால்கோவா, டெட்ரா பாக்கெட்டில் அடைக்கப்பட்ட பால், பேரிச்சம்பழக் கோவா, பன்னீர் மற்றும் நறுமணப் பால் போன்றவற்றை தயாரிக்கலாம் என குழு தனது கருத்தினை தெரிவித்தது.

166. இதற்கு ஆவின் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் நெய் நல்ல தரம் வாய்ந்ததாக இருப்பதால், அதற்கு தமிழகத்திலேயே நல்ல வரவேற்பு இருக்கிறது என்று அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிற்குத் தெரிவித்தார்.

167. குழு கூறியதுபோன்று, ஒவ்வொரு யூனியனிலும் பால் விற்பனை எவ்வளவு என்பதை கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். மதுரையில் கூடுதலான பாலினை வைத்துக்கொண்டு ஐஸ்கிரீம், நெய், வெண்ணெய் போன்றவற்றைத் தயாரித்து விற்பதற்கு வாய்ப்பு நிறைய இருக்கிறது. அதற்கான ஆய்வினையும் செய்து கொண்டிருக்கிறோம் என்று ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

168. அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் நடைபெறும் விரிவாக்கப் பணி மற்றும் வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ் உள்ள திருவண்ணாமலையில் பால் பவுடர் தயார் செய்யும் இயந்திரத்தை நிறுவி கட்டுமானப் பணிகளை நிறைவு செய்ய, துறை துரிதப்படுத்தி பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் செயல்பட்டு, பால் உபபொருட்களின் தரத்தினை மேம்படுத்தி அவைகளை விற்பனைக்கு அதிக அளவில் கொண்டுவர வேண்டும் என்றும், உபரியான பால் உபபொருட்களை அதிக அளவில் வெளிமாநிலங்களுக்கு அனுப்ப துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXV. கூடுதல் ஆவின்பால் முகவர்கள் நியமனம் செய்தல்:

169. ஆவின் நிறுவனத்தால் சந்தை வசதி (Marketing) சரியாகச் செய்யப்படுவதில்லை. அது மிகவும் பலவீனமாக இருக்கிறது. எனவே முறையாக ஆய்வு செய்து, அதற்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என்று குழு கருதுகிறது.

170. சந்தைப்படுத்துதலை (Marketing) குழு ஒரு முக்கியமானதாக கருதுகிறது. குழு பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது, குறிப்பாக இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் ஆவின் விற்பனை முகவர்கள் நியமனம் செய்ய இயலவில்லை என்பதை குழு அறிந்தது. இதற்கும் காரணம் மற்ற தனியார் பாலினை விற்பனை செய்யும் முகவர்களே ஆவின் பாலினையும் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். துறையின் மூலமாக நிறைய ஆவின் பால் விற்பனை முகவர்கள் நியமனம் செய்து, ஆவின் பாலினை மட்டும் விற்க அவர்கள் மூலம் ஏற்பாடு செய்யலாம் என்று குழு துறையிடம் தெரிவித்தது.

171. தற்போது எங்கெங்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றதோ, அவற்றிற்குத் தேவையான பணத்தை ஒதுக்கீடு செய்தும், மத்திய, மாநில அரசுகளின் நிதியினைக் கொண்டும், பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தி பால் உற்பத்தி அதிகப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது பல்வேறு இடங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்களை துறை மூலம் தொடங்கியிருக்கிறோம். மேலும், இப்போது இரண்டாம் வெண்மைப்புரட்சியை அடைய துறை விரைவுபடுத்திக் கொண்டிருக்கிறது என அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

172. ஆவின் பாலினை விற்பதற்கு பழைய முகவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தி ஆவின் பாலினை கூடுதலாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிடம் மீண்டும் தெரிவித்தார்.

173. ஆவின் பால் விற்பனையை அதிகரிக்க முதலில் துறை சந்தை வசதியை (Marketing) வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாவட்டங்களில் போதிய ஆவின் பால் முகவர்களை நியமனம் செய்வதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXVI. பணியாளர் நியமனம்

174. குழு, பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது துறையின் பல்வேறு நிலைகளில் உள்ள பணியிடங்கள் காலியாக உள்ளதை குழு அறிகிறது. மாவட்ட வாரியாக பல்வேறு நிலையில் உள்ள காலிப் பணியிட விவரங்களையும் இவற்றை நிரப்புவதற்கு துறை எடுத்துவரும் நடவடிக்கையினையும் குழு அறிய விரும்பியது.

175. இத்துறையில் உள்ள **137** முதுநிலை ஆய்வாளர் காலிப் பணியிடங்கள் தேர்வாணையத்தின் தொகுதி–2 நிலையில் உள்ள பணியிடங்கள் என்பதால் அரசாணை எண். 3, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் **8–1–2013** இன் வழியாக இக்காலிப் பணியிடங்களை நிரப்பிட தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் தொகுதி–2 இன் மூலமாக தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், 3 இலகு வாகன ஓட்டுநர் பணியிடங்களை

நிரப்பிடவும் மற்றும் காலியாக உள்ள 8 துணைப் பதிவாளர் (பால்வளம்) பணியிடங்களை நிரப்பிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் துறை குழுவிடம் தெரிவித்தது.

176. மேற்காணும் பணியிடங்களை விரைவில் நிரப்பிட துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இப்பணியிடங்கள் நியமனம் செய்யப்பட்டது குறித்து ஒரு அறிக்கையினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

177. தேனி பால் குளிரூட்டும் நிலையத்தில் 15 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வரும் தினக் கூலிப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டி ஆணையர், பால்வளத் துறை, சென்னை அவர்களுக்கு 10–6–2012 இல் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாகக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இக்கருத்துரு மீது துறை மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கையினைக் குழு அறிய விரும்பியது.

178. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் முறையற்ற வகையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளுக்கு முரணாகப் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் பணியினை பணிவரன்முறைப்படுத்த இயலாத நிலை இருந்து வந்தது. இந்நிலையில் இதுபோன்று பணியமர்த்தப்பட்டு, பணிபுரியும் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுப்பதிலிருந்து விலக்கு அளித்து இதர தகுதிகளைப் பெற்றிருக்கும் தினக் கூலிப் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த அரசாணை எண். 86, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 12–2–2001 இல் வழிவகை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 11 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் முறையற்ற வகையில் பணியமர்த்தப்பட்ட தினக் கூலிப் பணியாளர்களில் அனைத்து தகுதிகளையும் பெற்று மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலம் பணியமர்த்தப்படாத 202 பணியாளர்களின் பணிவரன்முறைப்படுத்தப்பட்டது. எனினும், இதரத் தகுதிகளான கல்வி, வயது மற்றும் இரண்டாண்டுகளில் 480 நாட்கள் தொடர் பணி ஆகியவற்றுக்கு விலக்கு கோரும் பணியாளர்களின் பணிவரன்முறைப்படுத்த இயலவில்லை. மேற்படி பணியாளர்களில் தேனி பால் குளிரூட்டும் நிலையத்தின் பணியாளர்களும் அடங்குவர்.

179. இந்நிலையில் முறையற்ற வகையில் கூட்டுறவுச் சங்கங்களில் பணியமர்த்தம் செய்யப்பட்ட பணியாளர்களது பணியினை வரன்முறை செய்ய அரசுக்கு அதிகாரம் இல்லை என சென்னை உயர் நீதிமன்ற வழக்குகளில் (10618/05 மற்றும் தொகுதிகள் நாள் 11–10–2007) தீர்ப்புரை வழங்கப்பட்டதன் அடிப்படையிலும் இவர்களது பணிவரன்முறை செய்யாத நிலையுள்ளது என்பதை குழு அறிகிறது.

180. இந்நிலையில் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட பணியாளர்களுக்கு இணையாக பணிவரன்முறை படுத்தப்படாத தினக் கூலிப் பணியாளர்களுக்கும் ஊதிய விகிதம் வழங்க கூட்டுறவுச் சங்க பதிவாளர் சுற்றறிக்கை எண் 92088/2008/SF3, நாள் 21–8–2008 இல் 1–4–2008 முதல் வழங்க வழிவகை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பால் வளத் துறையிலும் பணிவரன்முறைப்படுத்த இயலாத நிலையில் தினக் கூலிப் பணியாளராகத் தொடர்ந்து பணியாற்றிவரும் 10 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச் சேர்ந்த 155 தினக் கூலிப் பணியாளர்களுக்கும் இதன்படி ஊதிய விகிதம் (கடித எண் 20939/MP-II/2012, நாள் 11–11–2013) மூலம் வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது.

181. இதன் அடிப்படையில் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் தேனி பால் குளிரூட்டும் நிலைய பணியாளர்கள் உள்பட 42 பணியாளர்களுக்கு 11–11–2013 முதல் திருத்திய ஊதிய விகிதம் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை துறை குழுவிற்கு தெரிவித்தது.

182. பணிவரன்முறைப்படுத்த இயலாத நிலையில் தினக் கூலிப் பணியாளராக தொடர்ந்து பணியாற்றிவரும் 10 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச் சேர்ந்த 155 தினக் கூலிப் பணியாளர்களுக்கும், மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் தேனி பால் குளிரூட்டும் நிலைய பணியாளர்கள் உட்பட 42 பணியாளர்களுக்கு 11–11–2013 முதல் திருத்திய ஊதிய விகிதம் வழங்கப்பட்டுள்ள விவரம் குறித்து அறிக்கையை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XXXVII. ஆவின் நிறுவன ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்கல்:

183. அரசு துறையில் இருந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆனால், ஆவின் நிறுவனத்திலிருந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை என்ற கருத்து குழுவிற்கு தெரிவிக்கப்பட்டதால் இது குறித்து கருத்து தெரிவிக்குமாறு குழு துறையிடம் தெரிவித்தது.

184. இதற்கு, துறையில் 1995 இல் பணியில் சேர்ந்த ஊழியர்களின் சம்பளம் தவறுதலாக நிர்ணயிக்கப்பட்டது. அவர்களுடைய சம்பளம் ரூ.6,500 என்று அதைக் கணக்கிட்டுதான் 12 சதவிகிதம் தொழிலாளர் வருங்கால வைப்புத் தொகை (EPF) (பங்களிப்பு) வழங்கப்பட்டது. அவ்வாறு இருக்கும்போது ஒய்வூதியம் பெறும்போது அவர்களுக்கு ரூ.1,800 அல்லது ரூ.2,000 என்றுதான் ஒய்வூதியம் வருகிறது. அரசுத் துறை அதிகாரிகளுக்கு இணையாக ஒய்வூதியம் அளிப்பது என்பது கடினமான விஷயம். நிதி இல்லை. இதற்காக ஒரு குழு நியமித்து இருக்கிறோம். சில முடிவுகள் குறித்து காத்துக் கொண்டிருக்கிறோம். அரசுத் துறை அலுவலர்களுக்கு தர ஊதியம் (Grade Pay) என்று உள்ளது. இவர்களுக்கு ரூ.10,000, ரூ.6,700, ரூ.4,500 என்று பிரித்துச் செய்யலாமா என்று அக்குழு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. நிதித் துறையுடன் கலந்து ஆலோசித்து இது குறித்து முடிவு எடுக்கப்படும் என ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

185. மேலும், பால் வளத் துறை யூனியனில் பணிபுரிந்த 150 பேர் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். அரசுமூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சங்கங்களில் இருப்பவர்களுக்கும் தர ஊதியம் போன்று கொண்டு வருவதாக இருக்கிறோம். ஒய்வூதியம் குறித்து ஆணையர் அவர்கள் சொன்னது போன்று ஆய்வில் இருக்கிறது என்று அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிற்குத் தெரிவித்தார்.

186. ஒய்வூதியம் குறித்து குழு அறிக்கையை துறை மூலம் பெறப்பட்டவுடன் இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை துறை உரிய முறையில் ஆய்வு செய்து பின்பற்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXXVIII ஆவின் கடைகளில் ஆவின் பொருட்கள் மட்டும் விற்பனை:

187. திண்டுக்கல்லில் குழு ஆய்வுப் பயணத்தின்போது, நிறைய ஆவின் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆவின் பார்லர்களில் வால்மார்ட் போன்று இட்லி, தோசை எல்லாம் விற்கிறார்கள். இவற்றையெல்லாம் விற்பதற்கு எங்கே அனுமதி பெற்றார்கள் என்று தெரியவில்லை. இது குறித்து உரிய நடவடிக்கை எடுத்து என்னென்ன பொருட்கள் விற்க வேண்டும் என்று நிர்ணயம் செய்தால் நன்றாக இருக்கும் என்று குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

188. ஆவின் பார்லரில் ஆவின் பொருட்கள் மட்டும் விற்பனை செய்ய வேண்டும். தேநீர், காபி கூட விற்கக்கூடாது என்று துறை மூலம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது என்று ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

189. துறை இதுகுறித்து உரிய முறையில் ஆய்வு மேற்கொண்டு ஆவின் கடைகளில் ஆவின் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க வேண்டும் எனில், ஆவின் பொருட்கள் மட்டும் விற்பனை செய்வதற்கு துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXXIX. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பால் உற்பத்தி நிறுவனம் அமைத்தல்:

190. தமிழகத்தில் மொத்தம் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் இருக்கின்றன. சென்னையில் 3 ஆவின் நிறுவனம் இருக்கிறது. தமிழ்நாட்டில் 32 மாவட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆவின் பால் உற்பத்தி நிறுவனம் என்று இரண்டாவது வெண்மைப் புரட்சித் திட்டத்தின்கீழ் தொடங்குவதற்கு என்ன தயக்கம் என குழு துறையிடம் அறிய விரும்பியது.

191. ஒரு புதிய மாவட்டத்திற்கு ஒரு யூனிட் உருவாக்குவதற்கு அதிலே நிருவாகச் செலவுகள் அதிகம் இருக்கிறது. அதற்கும் மேலாக பால் கொள்முதல் அதிகமாக இருக்க வேண்டும். ஆனால், பால் கொள்முதல் குறைந்த அளவில் இருக்கிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சேலம், நாமக்கல் இரண்டும் சேர்த்து சேலத்தில் ஒரு யூனிட் இயங்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு மாவட்டம்தான் அடங்குகிறது. அங்கே நாளொன்றுக்கு சராசரியாக 8 ஆயிரம் லிட்டர் பால் வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் யூனிட் ஆரம்பிக்க வேண்டுமென்றால், கொள்முதல் அந்த அளவிற்கு இருக்க வேண்டும். கையாளும் திறன் அந்த அளவிற்கு இருக்க வேண்டும். ஆனால், அந்தத் திறன் குறைவாக இருக்கிறது. மற்ற மாநிலங்களில் வழக்கமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு யூனிட் என்ற அளவில் வைத்திருக்கிறார்கள். பால் விலை அதிகரித்துவிட்டால், செயலற்று இருக்கும் யூனிட்டுக்களை புனரமைத்து அரசே பால் கொள்முதல் செய்து அதிக அளவில் விற்பனை செய்யும் என ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

192. 17 சங்கங்களும் சரியானதொரு சென்டர் பாயின்டில்தான் உருவாக்கியிருக்கிறோம். ஏனென்றால் பால் உற்பத்திப் பெருக்கத்திற்கு சரியான முறையில் பால் குளிரூட்டும் நிலையம் இருந்தால், அதைச் சேமித்து வைப்பதற்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. உதாரணமாக திருச்சி, பெரம்பலூர் பின்தங்கிய பகுதி. அந்த பகுதி மக்களுக்கு விலையில்லா கறவை மாடுகள் வாங்கிக் கொடுக்கும்பட்சத்தில், பால் உற்பத்தி அதிகரித்து, அங்கே ஒரு யூனிட்டை தொடங்குவதற்கு வாய்ப்பிருக்கும் என்று அரசுச் செயலாளர் அவர்கள் மேலும் குழுவிடம் தெரிவித்தார்.

193. அரசின் சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பால் உற்பத்தி நிறுவனத்தைத் தொடங்கினால் ஆவின் பாலை பெருமளவில் மக்கள் விரும்பி வாங்குவார்கள். இரண்டாம் வெண்மைப் புரட்சியை நோக்கி விரைவாக துறை முன்னேறிக் கொண்டிருக்கும் வேளையில் பால் உற்பத்தியைப் பெருக்க சிறப்பான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருப்பதை குழு அறிகிறது.

194. பால் கொள்முதல் மற்றும் கையாளும் திறனை உயர்த்திட துறை உரிய நடவடிக்கையை துரிதமாக மேற்கொண்டு பிற மாநிலங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆவின் நிறுவனம் உள்ளதுபோல் தமிழ்நாட்டிலும் துவங்க நடடிவக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XL. பால்வளத் துறையில் மின் ஆளுமை திட்டம் (E-Governance)

195. மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் பெரும்பான்மையான பணிகளை மின் ஆளுமையின்கீழ் கொண்டுவர துறை மேற்கொண்டுள்ள நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

196. கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு மற்றும் மதுரை பால் பண்ணைகளில் மின் ஆளுமைத் திட்டம் நடைமுறைப்படுத்த நிதி உதவி பெறப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது என துறை குழுவிடம் தெரிவித்தது.

197. கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு மற்றும் மதுரை பால் பண்ணைகளில் மின் ஆளுமைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது குறித்து துறை குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பிவைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XLI. கூட்டுறவுச் சங்கத்தில் புதிய உறுப்பினர்களை சேர்த்தல்

198. குழு, பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, துறை அலுவலர்கள் மற்றும் புதிதாக தேர்வு செய்யப்பட்ட சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மூலம் கூட்டுறவு அமைப்பின் பல்வேறு பயன்களை எடுத்துக்கூறி புதிய உறுப்பினர்களை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை குழு அறிய விரும்பியது.

199. புதிய உறுப்பினர்கள் அதிகரிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மூலம் 3025 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அதன்மூலம் பால் கொள்முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

200. மாவட்ட வாரியாக புதிய உறுப்பினர்களை அதிகரிக்க சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மூலம் 3025 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ள விவரங்கள் குறித்த அறிக்கையை துறை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XLII பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குக் கடன் வழங்கல்

201. பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதில் துறையின் பங்கு குறித்து குழு அறிய விரும்பியது.

202. இத்துறையின் மூலமாக நேரடியாக கறவை மாட்டுக் கடன் வழங்குவதில்லை எனவும் மத்திய அரசின் பால் பண்ணை வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் (Dairy Entrepreneurship Development Scheme) கீழ், குறைந்தபட்ச அளவாக 2 முதல் அதிகபட்சமாக 10 கறவை மாடுகள் வாங்கி சிறு பால் பண்ணைகள் அமைக்க ரூ.5.00 இலட்சம் வரை வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. பொதுப் பிரிவினருக்கு 25 சதவீதம் மானியமும், தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 33.33 சதவீதம் மானியத்தில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. (10 கறவை மாடுகள் கொண்ட அலகிற்கு அதிகபட்சமாக மூலதன மானியமாக பொதுப் பிரிவினருக்கு ரூ.1.25 இலட்சமும், தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ரூ.1.67 இலட்சமும் வழங்கப்படுகிறது.) துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்பட்ட மனுக்கள் பரிந்துரைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப்படுகிறது. மேற்படி மனுக்கள் வங்கிகளின் விதிமுறைகளுக்குட்பட்டு தகுதியானவர்களுக்குக் கறவை மாட்டுக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

203. மேலும் கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் 14,053 கறவை மாடுகளும் 2012–2013 ஆம் ஆண்டில் 10,331 கறவை மாடுகளும் வாங்கப்பட்டது என துறை குழுவிடம் தெரிவித்தது.

204. துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்பட்ட மனுக்கள் பரிந்துரைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப்படுவதை குழு அறிகிறது. மேற்படி மனுக்கள் வங்கிகளின் விதிமுறைகளுக்குட்பட்டு தகுதியானவர்களுக்கு கறவை மாட்டுக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் குழுவிடம் துறை மூலம் தெரிவிக்கப்பட்டது.

205. 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 இல் மேற்கூறப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கறவை மாட்டுக் கடன் பெற்ற பயனாளிகளின் விவரத்தை மாவட்ட வாரியாகக் குறிப்பிட்டு அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XLIII. கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கல்

206. திண்டுக்கல் மாவட்டத்தில் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நலத் திட்டத்தின்கீழ் விபத்தில் மரணம் அல்லது ஊனமடையும் உறுப்பினர்களுக்கு விதிகளுக்குட்பட்டு காப்பீட்டுத் தொகை பெற்று வழங்கப்படுவதாக திண்டுக்கல் துணைப் பதிவாளர் குழுவிடம் தெரிவித்தார். இதுகுறித்து இனம் வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் இத்திட்டத்தில் இதுவரை பயன்பெற்ற உறுப்பினர்களின் விவரங்களை குழு அறிய விரும்பியது.

207. பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பால் உற்பத்தியாளர்கள் நல நிதித் திட்டம் அரசு ஆணை (நிலை) எண் 63, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 28–4–2010–இன்படி ஏற்படுத்தப்பட்டது.

208. இந்நல நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்படும்:

வரிசை எண்	காரணம்	தொகை
1.	உறுப்பினர் விபத்தின் காரணமாக மரணமடைந்தால்	ரூ.1.00 இலட்சம்
2.	உறுப்பினர் ஒன்றுக்கு மேற்பட்ட உடல் உறுப்புகளை இழந்தால்	ரூ.1.00 இலட்சம்
3.	உறுப்பினர் ஏதாவது ஒரு உடல் உறுப்பினை இழந்தால்	ரூ.50,000/–
4.	உறுப்பினரின் 21 வயதிற்குகீழ் உள்ள 2 குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை நபர் ஒருவருக்கு	ரூ.5,000/–
5.	உறுப்பினரின் 21 வயதிற்கு கீழ் உள்ள ஒரு பெண் குழந்தைக்குத் திருமண உதவித் தொகை	ரூ.10,000/–

209. இந்நல நிதியிலிருந்து உதவி கோரி மாவட்ட வாரியாகப் பெறப்பட்டுள்ள மனுக்களின் விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	சரகத்தின் பெயர்	கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை
1.	திருவாரூர்	1
2.	தஞ்சாவூர்	1
3.	திருவண்ணாமலை	3
4.	தருமபுரி	2
5.	பெரம்பலூர்	3
6.	நாமக்கல்	3
7.	திருச்சி	4
8.	அரியலூர்	1
9.	காஞ்சிபுரம்	1

10.	வேலூர்	2
11.	தேனி	2
12.	கடலூர்	1
13.	சேலம்	1
14.	கோயம்புத்தூர்	2
15.	ஈரோடு	2
16.	விழுப்புரம்	1
17.	நாகர்கோவில்	1
	மொத்தம்	31

210. அரசு ஆணை (நிலை) எண் 306, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 20-11-2013-இன்படி இந்நல நிதியின் பெயர் திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் நல நிதிமூலம் வழங்க வேண்டிய உதவித் தொகையின் அளவும் கீழ்க்கண்டவாறு உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது:

1) மரணமடையும் உறுப்பினருக்கு உதவித் தொகை ரூ.1/- இலட்சத்திலிருந்து ரூ.1.75 இலட்சமாகவும்;

2) ஒன்றுக்கு மேற்பட்ட உடல் உறுப்புகளை இழந்த உறுப்பினருக்கு உதவித் தொகை ரூ.1/- இலட்சத்திலிருந்து ரூ.1.75 இலட்சமாகவும்;

3) உடலில் ஏதாவது ஒரு உறுப்பினை இழந்த உறுப்பினருக்கு உதவித் தொகை ரூ.50,000/- லிருந்து ரூ.75,000/- ஆகவும்;

4) உறுப்பினரின் மகள்/மகளுக்கு கல்வி உதவித் தொகை ரூ.5,000/- லிருந்து ரூ.10,000/- ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தங்களை அரசிதழில் வெளியிட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

211. அரசு ஆணை அரசிதழில் வெளியிடப்பட்டதும் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள 31 கோரிக்கை மனுக்களுக்கும் உரிய நிதி உதவி வழங்கப்படும் என துறை மூலம் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

212. மேலும், திண்டுக்கல் மாவட்டத்தில் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் விபத்தில் மரணம் அல்லது ஊனமடைந்த உறுப்பினர்கள் எவரும் இல்லை. எனவே, காப்பீட்டுத் தொகை வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு நலநிதி வழங்கவுள்ள விவரத்தைத் துறை குழுவிற்கு தெரிவித்தது.

213. அரசு ஆணை (நிலை) எண் 306, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 20–11–2013 இன் கீழ் நவநிதி உதவித் தொகையின் அளவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அரசு ஆணை அரசிதழில் வெளியிடப்பட்டு துறை மேற்கொண்ட துரித நடவடிக்கை மூலம் 31 கோரிக்கை மனுக்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ள விவரத்தை துறை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XLIV. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் ESI கட்டணம் செலுத்துவதிலிருந்து விதி விலக்கு

214. விருதுநகர், காரைக்குடி, மதுரை, நீலகிரி மற்றும் சேலம் ஆகிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு அரசு ஆணை (டி) எண் 590, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு (தொழிலாளர் துறை), நாள் 6–7–1992 மற்றும் அரசு ஆணை (டி) எண் 172, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு (தொழிலாளர் துறை), நாள் 5–2–2003 ஆகிய அரசாணைகளின்கீழ் ஏற்கெனவே ESI இலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது போன்று திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு 1–11–1999 முதல் 31–3–2010 வரை உள்ள காலத்திற்கு இவ்வொன்றியத்திற்கு ESI இலிருந்து ரூ.45,52,060/– வட்டி உட்பட விலக்கு அளித்து ஆணை வழங்கிட பரிந்துரை வழங்கக் கோரி குழுவிற்கு கோரிக்கை வரப்பெற்றுள்ளது. இது குறித்து துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

215. சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் ESI நிறுவனத்திற்கு தொடர்ந்து பங்கு செலுத்தி வருகிறது. மேலும், சிவகங்கை ஒன்றியம் 31–10–2012 வரையிலும், மதுரை ஒன்றியம் 2006 வரையிலும், நீலகிரி ஒன்றியம் 2007 வரையிலும், திருநெல்வேலி ஒன்றியம் 2012 வரையிலும் விலக்கு பெற்றுள்ளது என குழுவிடம் துறை மேலும் தெரிவித்தது.

216. மேற்கண்ட ஒன்றியங்கள் மேலும் உள்ள காலங்களுக்கு ESI கட்டணம் செலுத்துவதிலிருந்து விதி விலக்கு அளிக்கக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டு அரசாணை (டி) எண் 590, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு (தொழிலாளர்) துறை, நாள் 6–7–1992 மற்றும் அரசு ஆணை (டி) எண் 172, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு (தொழிலாளர்) துறை, நாள் 5–2–2003–ன்கீழ் விதி விலக்கு அளிக்க அரசின் அறிவுரைப்படி விதிவிலக்கு கோரி நடவடிக்கை எடுக்கப்படும் என துறை குழுவிற்கு தெரிவித்தது.

217. மேற்கண்ட ஒன்றியங்கள் மேலும் உள்ள காலங்களுக்கு **ESI** கட்டணம் செலுத்துவதிலிருந்து விதி விலக்கு அளிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XLV. சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிக பால் விற்பனை நிலையங்களை அமைக்க நடவடிக்கை

218. சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 50,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதாகவும், இதுபோன்ற நேர்வுகளில் பால் இங்கிருந்து கேரளாவிற்கு அனுப்பப்படுவதாகவும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. ஆவின் பால் மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளதால், இம்மாவட்டங்களிலும் பால் விற்பனை நிலையங்களை அதிகப்படுத்தி பால் விற்பனையைக் கூடுதலாக்க துறை எடுத்துள்ள நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

219. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பால் விற்பனை நிலையங்களை அதிகப்படுத்தி பால் விற்பனையை கூடுதலாக்க புதிதாக 50 பால் விற்பனை நிலையங்களை கொள்முதல் செய்ய 6–12–2013 அன்று நடைபெற்ற இவ்வொன்றிய நிர்வாகக் குழு அனுமதி பெறப்பட்டுள்ளது. உரிய நடைமுறைகளை பின்பற்றி பாலகப் பெட்டிகள் கொள்முதல் செய்து பாலகங்கள் அமைத்து பால் விற்பனையைப் பெருக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை குழுவிற்கு துறை தெரிவித்தது.

220. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பால் விற்பனையை அதிகரிக்க புதிதாக 50 பால் பூத்துக்களை அமைக்க இவ்வொன்றிய நிர்வாகக் குழு அனுமதி பெற்றுள்ளது என்று துறை குழுவிடம் தெரிவித்தது.

221. துறை விரைவான நடவடிக்கை எடுத்து சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 50 புதிய பால் பூத்துக்களை அமைத்து பால் விற்பனையை அதிகரிக்க வழிவகை ஏற்படுத்த வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XLVI. மாவட்டத்தில் பழுதடைந்த பால்பதன ஆலையின் இயந்திரங்களை மாற்றல்

222. சிவகங்கை மாவட்டத்தில் தற்போது பால் குளிரூட்டும் நிலைய வசதி இல்லையென்றும், 2 தற்காலிக பால் குளிர்விப்பான் (Cooler) மட்டும் செயல்படுவதாகவும், இதன்மூலம் அருகிலுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பால் அனுப்பப்பட்டு வருவதாகவும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. மேலும், சிவகங்கையில் இரண்டு வருடங்களுக்கு முன் 1 லிட்டர் பாக்கெட் பால் விற்பனை செய்ததாகவும், அந்த இயந்திரங்கள் தற்போது பழுதடைந்துவிட்டதாகவும், பழுதடைந்த இயந்திரங்களைப் புதுப்பிக்கக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாகவும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக குழுவும் பரிந்துரை செய்ய விரும்புகிறது. இது குறித்து துறை எடுத்துவரும் நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

223. நிறை கொழுப்புடைய 1 லிட்டர் பாக்கெட் பால் 23–11–2013 முதல் மீண்டும் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 1500 லிட்டர் நிறை கொழுப்புடைய பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதை குழுவிற்குத் துறை தெரிவித்தது. காரைக்குடி பால்பதன ஆலையின் தரத்தை உயர்த்தவும், பழுதடைந்த இயந்திரங்களுக்கு மாற்றாகத் தேவையான புதிய இயந்திரங்களைக் கண்டறியவும் தொழில்நுட்ப அலுவலர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது என துறை குழுவிடம் மேலும் தெரிவித்தது.

224. காரைக்குடி பால்பதன ஆலையின் தரம் உயர்த்தவும், பழுதடைந்த இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களைக் கண்டறியவும் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு இப்பணிகளை நிறைவு செய்ய வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XLVII. பழுதடைந்த பால்பதன ஆலையின் இயந்திரங்களை மாற்றல்

225. குழு, ஆய்வுப்பயணம் மேற்கொண்ட போது, வேலூர் பால்பண்ணையில் அக்மார்க் நெய், பால்கோவா, மில்க்கேக், டேட்ஸ் கோவா மற்றும் குல்பி ஐஸ்கீரிம், மோர், தயிர், லஸ்ஸி, பாதாம் பவுடர் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக குழுவிடம் துறை தெரிவித்தது.

226. மேலும், பால்பண்ணையின் பயன்பாட்டில் உள்ள இயந்திரங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பாக நிறுவப்பட்டுள்ளதாகவும், அவை பராமரிக்கப்படுவதற்கு அதிக செலவாவதாகவும், புதிதாக பால் குளிர்விக்க பயன்படும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்ய குழுவிடம் துறை மூலம் கோரிக்கை வைக்கப்பட்டது.

227. வேலூர் பால்பண்ணையில் பால் குளிர்விக்கப் பயன்படும் இயந்திரங்களை தேவையான அளவு கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்து, புதிய இயந்திரங்கள் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

*****

சென்னை – 600 009,
நாள் : 30.5.2014
வைகாசி 16, திருவள்ளுவர் ஆண்டு – 2045

அ. பாப்பாசுந்தரம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பாகம்–2

நிகழ்ச்சி பகுதி

2013 ஜூன் 4, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு. 2013 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 4 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லக் குடியிருப்பு வளாக உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை–1ல் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு.வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி. கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, 2013–2014 ஆம் ஆண்டு எந்தெந்த துறைகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என விவாதிக்க கூடியது.

பின்னர், குழு கீழ்க்கண்ட துறைகளின் மதிப்பீடுகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதென முடிவு செய்தது :

1. பள்ளிக் கல்வித் துறை
2. சுற்றுலா (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)
3. சமூக நலன் (மாற்றுத் திறனாளிகள் நலன் தவிர) (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை)
4. கால்நடை மற்றும் பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை)

இதைத் தொடர்ந்து குழு தேர்வு செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் குறித்து ஆய்வு செய்ய மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொள்ளலாம் என முடிவு செய்தது.

2013 ஜூலை 3, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ஆம் நாள், புதன்கிழமை காலை 10.00 மணியளவில், தேனி மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு. சு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, தேனி மாவட்டம், ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்தை பார்வையிட்டது. அக்குளிரூட்டும் நிலையம் தற்போது நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடன் இயங்கி வருவதாகவும் அந்நிலையத்தின் பொது மேலாளர் தகவல் தெரிவித்தார்.

பின்னர் குழு, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, தேக்கடி சென்று இரவு தங்கியது.

2013 ஜூலை 4, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், தேக்கடியில் உள்ள தனியார் விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு. க.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, கொடைக்கானலுக்கு செல்லும் வழியில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, கொடைக்கானல் சென்று இரவு தங்கியது.

2013 ஜூலை 5, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5 ஆம் நாள், வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணியளவில், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், கோஹினூர் ஷேக் அப்துல்லா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. அர. சக்கரபாணி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜான் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திண்டுக்கல்லுக்கு செல்லும் வழியில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

பின்னர் குழு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு திண்டுக்கலில் கலைந்தது.

2013 ஆகஸ்ட் 19, திங்கட்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் இல்லக் குடியிருப்பு உபவசதி கட்டிடத்திலுள்ள குழு கூட்ட அறை எண்–1ல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். கீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. க. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, மாதவரத்தில் உள்ள மத்திய பால்பண்ணையினை பார்வையிட்டது. அப்பண்ணை நாள் ஒன்றுக்கு 3.20 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தி கையாளும் திறன் கொண்டது என்றும் பாலினை கொண்டு இதர உப்ப் பொருட்கள் தயாரிக்கப்படுவதாகவும் உதவி பொது மேலாளர் தகவல் தெரிவித்தார். மேலும், அப்பண்ணை மத்திய அரசின் ISO 9001 : 2008, HACCPIS / 5000 : 1998 மற்றும் EMS : ISO / 14001: 2004 தரச்சான்று பெற்றுள்ளது என்றும் தெரிவித்தார்

குழு, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு சென்னையில் இரவு தங்கியது.

2013 ஆகஸ்ட் 20, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம் சட்டமன்ற உறுப்பினர் இல்ல குடியிருப்பு உபவசதி கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1 இல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. க. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜான் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் .. செயலாளர்
திரு. க. பாலகுப்பிரமணியன் .. இணைச் செயலாளர்
திரு. க. பூபதி .. துணைச் செயலாளர்

குழு, திருவள்ளூரில், இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு காஞ்சிபுரம் சென்று இரவு தங்கியது.

2013 ஆகஸ்டு 21, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட், திங்கள் 21 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.00 மணியளவில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்திலுள்ள தனியார் சுற்றுலா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, காஞ்சிபுரத்தில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு காஞ்சிபுரத்தில் கலைந்தது.

2013 செப்டம்பர் 19, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், விருதுநகர் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. கா.மராஜ்
திரு. க. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பூபதி .. துணைச் செயலாளர்

குழு, விருதுநகரில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, அன்று இரவு குற்றாலத்திற்கு சென்று தங்கியது.

2013 செப்டம்பர் 20, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில், குற்றாலத்திலுள்ள பொதுப்பணித்துறை அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. கு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திருநெல்வேலி ரெட்டியார்பட்டியில் ஆவின் மத்திய பால் பண்ணையினை பார்வையிட்டது. அப்பால் பண்ணை 1 இலட்சம் லிட்டர் பாலினை கையாளும் திறன் கொண்டது என்றும், பாலினை கொண்டு இதர உப்பொருட்கள் தயாரிக்கப்படுவதாகவும் பொது மேலாளர், ஆவின், தெரிவித்தார்.

குழு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு திருநெல்வேலியில் கலைந்தது.

2013 நவம்பர் 5, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில், இராமேஸ்வரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதியில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.முபி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, இராமநாதவுரத்தில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு சிவகங்கை சென்று இரவு தங்கியது.

2013 நவம்பர் 6, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.30 மணியளவில், சிவகங்கை வேலுநாச்சியார் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. க. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, சிவகங்கையில் உள்ள வீழினேரி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தினை பார்வையிட்டது. அப்போது கூட்டுறவு சங்கத்தின் தலைவர் சங்கத்தின் செயல்பாடு குறித்து தெரிவித்தார்.

குழு, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு சிவகங்கையில் கலைந்தது.

2013, டிசம்பர் 30, திங்கட்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2013 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1ல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி. கே. பாலபாரதி
முனைவர். எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட" பால்வளம் " மதிப்பீடு தொடர்பாக கால்நடை, பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத்துறையின் அரசுச் செயலாளர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறையின், ஆணையர் மற்றும் இதர துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

2014 ஜூன் 26, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் வேலூர் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, வேலூரில் சத்துவாச்சாரி பகுதியில் உள்ள ஆவின் பால் பண்ணையை பார்வையிட்டது. அப்பண்ணை 1.25 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்டது என்றும் மற்றும் பாலினை கொண்டு இதர உப்பொருட்கள் தயாரிக்கப்படுவதாக பொது மேலாளர் தெரிவித்தார்.

குழு, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள குழு கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு திருவண்ணாமலை சென்று இரவு தங்கியது.

2014, ஜூன் 27 வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாள்,வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் திருவண்ணாமலை அரசினர் விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்


திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திருவண்ணாலையில் உள்ள அம்மாபாளையம் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை பார்வையிட்டது. இத்தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 2 இலட்சம் விட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு 20 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், பால் பண்ணையின் கட்டுமான பணி முடிக்கப்பட்டு சோதனை ஒட்டத்திற்கு தயார் நிலையில் உள்ளது என்றும் பால் பவுடர் தொழிற்சாலையின் கட்டுமான பணி தொடந்து நடைபெற்று வருவதாகவும் பொது மேலாளர், ஆவின் நிறுவனம், குழுவிற்கு தெரிவித்தார்.

குழு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, திருவண்ணாமலையில் கலைந்தது.


STRUCTURE OF THE DEPARTMENT



Office of the

1. Deputy Registrar (Dairying), kancheepuram
2. Deputy Registrar (Dairying), Thiruvallur
3. Deputy Registrar (Dairying), Thiruvannamalai
4. Deputy Registrar (Dairying), Vellore
5. Deputy Registrar (Dairying), Cuddalore
6. Deputy Registrar (Dairying), Villupuram
7. Deputy Registrar (Dairying), Dharmapuri
8. Deputy Registrar (Dairying),Salem
9. Deputy Registrar (Dairying),Namakkal
10. Deputy Registrar (Dairying), Erode
11. Deputy Registrar (Dairying), Tirupur
12. Deputy Registrar (Dairying),Coimbatore
13. Deputy Registrar (Dairying), Ooty
14. Deputy Registrar (Dairying),Thanjavur
15. Deputy Registrar (Dairying),Thiruvarur
16. Deputy Registrar (Dairying), Trichy
17. Deputy Registrar (Dairying), Perambalur
18. Deputy Registrar (Dairying), Ariyalur
19. Deputy Registrar (Dairying),Dindugal
20. Deputy Registrar (Dairying), Madurai
21. Deputy Registrar (Dairying),Theni
22. Deputy Registrar (Dairying), Manamadurai
23. Deputy Registrar (Dairying),Virudhunagar
24. Deputy Registrar (Dairying),Tirunelveli
25. Deputy Registrar (Dairying),Nagercoil

1.Kancheepuram-Tiruvallur DCMPU
2.Vellore-Tiruvannamalai DCMPU
3.Villupuram-Cuddalore DCMPU
4.Dharmapuri DCMPU
5.Salem DCMPU
6.Erode DCMPU
7. Coimbatore DCMPU
8. Nilgiris DCMPU
9.Thanjavur DCMPU
10.Trichy DCMPU
11. Pudukkottai DCMPU
12.Dindigul DCMPU
13.Madurai DCMPU
14.Manamadurai DCMPU
15.Virudhunagar DCMPU
16. Tirunelveli DCMPU
17. Kanyakumari DCMPU


இணையம்
(1)
பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவு ஒன்றியங்கள்
(17)
தொடக்கப்பால் கூட்டுறவு சங்கங்கள்
(11,397)

பரிந்துரைகளின் சுருக்கம்

1. தமிழகத்தில் உற்பத்தியாகும் பால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் மற்றும் விற்பனை செய்யும் அளவு தனியாரைக் காட்டிலும் குறைவாக உள்ளதை குழு அறிகிறது. இந்நிலைக்குரிய காரணத்தை ஆய்வு செய்து இதனை உயர்த்த துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.23)

2. தமிழ்நாட்டிலுள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் பால் கொள்முதலை நாளொன்றுக்கு சாதனை அளவான 27.15 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து உயர்த்துவதற்கு துறை வழிவகை காண வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.27)

3. புதியதாக இரண்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கி உள்ளதை குழு அறிகிறது. துறை துரித நடவடிக்கையினை எடுத்து புதிய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் அமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.29)

4. மேற்காணும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது குறித்து துறை அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.35)

5. திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் குறித்த காலத்திற்குள் பால் மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கும் பணிகளை நிறைவு செய்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.38)

6. பெரம்பலூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை நிறுவும் பணியை விரைவாக மேற்கொண்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.41)

7. 2013–2014 இல் அமைக்கப்படவேண்டிய எஞ்சியுள்ள 64 கூட்டுறவுச் சங்கங்களை விரைவாக அமைக்க நடவடிக்கை எடுத்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.47)

8. தமிழ்நாட்டில் பால் குளிரூட்டும் நிலையம் அவசியம் அமைக்க வேண்டும் என கண்டறியப்பட்ட பகுதிகளில் அதன் சிறப்பினை எடுத்துக்கூறி கோரிக்கைகளைப் பெற்று நவீன முறையில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க துறை விரைவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.50)

9. தமிழகத்தில் 2013–2014 இல் எங்கெங்கு பால் பண்ணைகளை நவீனப்படுத்த உள்ளன என்ற விவரங்களை குழுவிற்கு தெரிவித்து தெரிவு செய்யப்பட்டவற்றை விரைவாக நடவடிக்கை எடுத்து பணிகளை நிறைவேற்ற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.53)

10. 2012–2013 இல் தூய பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பிள்ளையார் குளத்தில் பால் குளிர்விப்பான் மையம் அமைக்கும் பணி நிறைவுபெற்று பயன்பாட்டிற்கு வந்தது குறித்து துறை அறிக்கை அனுப்புமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.56)

11. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள புதூரில் பால் குளிர்விப்பான் மையம் நிறுவுவதற்கு துறை துரித நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான இடத்தைப் பெற்று குளிர்விப்பான் மையம் நிறுவும் பணியை நிறைவு செய்வதற்கு துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 58)

12. இராமநாதபுரம் மாவட்டத்தில் அச்சங்குளம், பாண்டியூர், விளங்குளத்தூர் மற்றும் வள்ளிமாடன்வலசை ஆகிய இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான் மையங்கள் அமைக்கும் பணிகள் நிறைவடைய துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 61)

13. சிவகங்கை மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5000 லிட்டர் கொள்ளளவில் 4 பால் குளிர்விப்பான் நிலையங்கள் கற்களத்தூர், வாராப்பூர், மானாமதுரை மற்றும் பட்டமங்கலம் ஆகிய இடங்களில் அமைக்க 2014–2015 இல் உரிய நிதியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, இப்பணியை நிறைவு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 64)

14. இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு எஞ்சிய 20 பால் பகுப்பாய்வுக் கருவிகள் கொள்முதல் செய்து வழங்கி, பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 67)

15. சென்னை, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் தற்போது வெண்ணெய் குளிரூட்டும் வசதி அமைக்கும் பணி நிறைவுபெற துறை துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 70)

16. 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 இல் பால் கறவை இயந்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு கருவிகள் வாங்க அரசிடமிருந்து நிதி பெறப்படவில்லை என்பது குறித்து குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. இது குறித்து காரணத்தை குழுவிற்கு துறை அறிக்கையாக அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.73)

17. 2013–2014 இல் எஞ்சியுள்ள செயலிழந்த பால் கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்களை குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் எனவும் இவைகளைப் புதுப்பிக்க துறை துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 78)

18. 10ஆண்டுகளுக்கு மேலாக துறைமூலம் சங்கங்களில் தணிக்கை செய்யப்படாத சூழ்நிலையை குழு அறிகிறது. துரித நடவடிக்கை மேற்கொண்டு தணிக்கை செய்யப்பட வேண்டிய சங்கங்களில் தணிக்கையை முடித்து குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 80)

19. 2013–2014 இல் குளிர்பதன வசதி கொண்ட இரண்டு வாகனங்களும் மற்றும் மூன்று வெப்பத்தடை செய்யப்பட்ட வாகனங்களும் கோயம்புத்தூரில் பாடி கட்டும் பணி நிறைவுபெற்று, முழுமையான வாகனங்களும் பெறப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுவிட்டதா என்பது குறித்த அறிக்கையினை குழுவிற்கு துறை அனுப்பிவைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 83)

20. திருச்சி பால் பண்ணையில் 2013–2014 இல் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் பால் குளிர்விப்பு மற்றும் நவீன சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் நிறைவடைய துறை விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 86)

21. கிருஷ்ணகிரி பால் பண்ணையில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு மாதிரி ஓட்டப் பணிகள் நிறைவு பெற்றது குறித்து அறிக்கை ஒன்றை குழுவிற்கு அளிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 88)

22. 2012–2013 இல் சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் நிறைவு பெற்றது குறித்து துறை அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.91)

23. தூய பால் உற்பத்தித் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதி உதவியில் மீதமுள்ள ரூ.15.35 இலட்சத்தை இந்த நிதியாண்டில் பெற துரித நடவடிக்கையை துறை மேற்கொண்டு திட்டப் பணிகளை முழுமையாகச் செயல்படுத்தி நிறைவு செய்து அறிக்கையினை குழுவிற்கு அளிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.95)

24. தஞ்சாவூர் மற்றும் சேலம் ஒன்றியங்களில் தூய பால் உற்பத்தித் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கருத்துருக்களுக்கு ஒப்புதல் பெற துறை துரித நடவடிக்கை மேற்கொண்டு மத்திய அரசின் நிதி உதவியைப் பெற்று திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.98)

25. மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 2011–2012 இல் காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஒன்றியத்திற்கு வழங்கவேண்டிய ரூ.170 இலட்சத்தில் மீதமுள்ள தொகையான ரூ.129.82 இலட்சம் (மத்திய அரசு ரூ.64.19 இலட்சம், மாநில அரசு ரூ.64.91 இலட்சம்) வழங்கக் கோரி மத்திய அரசை வலியுறுத்தி துரித நடவடிக்கையை மேற்கொண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒன்றியத்தால் வழங்கப்பட வேண்டிய பால் பண நிலுவைத் தொகையை விரைவாக வழங்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 103)

26. குழு நீலகிரி மாவட்டத்தில் "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் கருத்துரு மீது மத்திய அரசிடம் விரைவாக ஒப்புதல் பெற்று பணியை மேற்கொள்ள துரித நடவடிக்கையினை துறை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.106)

27. திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பால் பண்ணை குளிர்விப்பு வசதிகள் மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணிகளைத் துவங்கி விரைவான நடவடிக்கையை மேற்கொண்டு பணிகள் நிறைவுபெற்றது குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்பிவைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 109)

28. இத்துறையின் பணியிலிருக்கும் பணிமூப்பு பெற்ற மூத்த அலுவலர் ஒருவரை அவர் தொழில்நுட்ப கல்வி தகுதியுடையராக இருப்பின் **Designated Officer** ஆக பணி நியமனம் செய்து அவர்களை வைத்து தர நிர்ணயம் செய்ய வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 115)

29. தமிழ்நாட்டில் தனியார் பால் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு என்று உரிமம் தருவதற்கு உரிய நடவடிக்கைகளை துறை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 121)

30. தமிழகத்தில் பால்வளத் துறையின்கீழ் இயங்கி வரும் நான்கு தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்குத் தேவையான பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்பப் பணியிடங்களை கூடுதலாக உருவாக்கி, உடனடியாகப் பணியாளர்களை பணியில் அமர்த்தி அனைத்து ஆய்வகங்களையும் நல்ல நிலையில் இயங்கச் செய்ய துறை விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு இது குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 126)

31. மேலும், சென்னையில் நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் **(Mobile Quality Control Laboratory)** உள்ளதைப் போன்று, மாவட்டத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 127)

32. இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும், சுற்றுலாத் தலங்கள் நிறைய உள்ள பகுதியாக இருப்பதாலும், பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்கள் மிகுந்த மாவட்டமாக இருப்பதாலும், அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கென தனியாக பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க துறை ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.132)

33. குழுவின் கருத்தினை துறை பரிசீலித்து நல்ல நோய் எதிர்ப்பு சக்திகொண்ட, அதிக பால் கொடுக்கும் மாடுகளை வாங்கவும், அதன்மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கவும், துறை உரிய நடவடிக்கையினை எடுக்கவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.135)

34. திண்டுக்கல் மாவட்டத்தில் பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவையான 10 ஏக்கர் நிலத்தைப் பெற துரித நடவடிக்கையை எடுத்து நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.138)

35. வேலூர் பால்பண்ணையின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் பால் உபபொருட்களை உற்பத்தி செய்யும் பிரிவிற்கு போதிய இடவசதியை ஏற்படுத்த வேலூருக்கு அருகில் நீர்வசதியுள்ள 10 ஏக்கர் நிலத்தை தெரிவு செய்து பால்பண்ணைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு துறை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 140)

36. திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் செயல்பட்ட 50 பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டதற்கான காரணத்தை ஆய்வு செய்து, இத்தகைய சங்கங்களை அங்கு மீண்டும் இயங்கச் செய்வதற்கு துறைமூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 142)

37. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை என ஒருங்கிணைந்த துறையாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் பால் வளத்தை தமிழ்நாட்டில் மேம்படுத்தும் விதமாக பால் வளத் துறையை தனியாக பிரதான துறையாக தரம் உயர்த்த ஆய்வு மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 144)

38. மேலும், பால் வளத் துறைக்கென்று மத்திய அரசும், மாநில அரசும் கோடிக்கணக்கான தொகையை மானியமாக வழங்குகிறது. இந்த நிதியை தனியார் அனுபவிப்பதை துறை தடுத்திடவேண்டும். இத்தகைய உதவிகள் அனைத்தும் அரசு நிறுவனங்களுக்கும், ஆவின் நிறுவனத்திற்கும் சென்று அடைய உரிய நடவடிக்கைகளை துறை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 146)

39. பால் வளத் துறையும் தனியார் நிறுவனங்கள் செயல்படுவது போல் பாலினை கொள்முதல் செய்து, பால் விற்பனையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.148)

40. நூறு சதவிகிதம் பால் கொள்முதலை சொசைட்டிகளிலிருந்து பெற வேண்டும் என்று குழு வலியுறுத்தியது. துறை இவ்விஷயத்தில் முழு கவனம் செலுத்தி அரசு மூலம் விலையில்லாமல் வழங்கப்படும் கறவை மாடுகள் மூலம் கிடைக்கின்ற பால், அரசு நிறுவனத்திற்கே வரவேண்டும் என்ற வகையில் செயல்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.151)

41. தமிழ்நாட்டில் எந்தெந்த பகுதிகளில் விலையில்லாக் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளில் பாலினைக் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக, பால் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கும்போது தேவையான விதிமுறைகளை எளிமைப்படுத்தி மேற்கொள்ள அடையாளம் கண்டு, இவர்களுக்கு ஊதியம் எவ்வாறு வழங்குவது என முடிவெடுத்து, அதன்பின்னர் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 153)

42. தருமபுரி ஒன்றியத்தில் பால் பணம் பட்டுவாடா உரிய காலத்தில் நிலுவை இல்லாது வழங்க ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மற்றும் பால் பணம் பட்டுவாடா செய்ய சிரமப்படும் ஒன்றியங்களைப் புனரமைக்க துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 161)

43. அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் நடைபெறும் விரிவாக்கப் பணி மற்றும் வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ் உள்ள திருவண்ணாமலையில் பால் பவுடர் தயார் செய்யும் இயந்திரத்தை நிறுவி கட்டுமானப் பணிகளை நிறைவு செய்ய, துறை துரிதப்படுத்தி பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் செயல்பட்டு, பால் உபபொருட்களின் தரத்தினை மேம்படுத்தி அவைகளை விற்பனைக்கு அதிக அளவில் கொண்டுவர வேண்டும் என்றும், உபரியான பால் உபபொருட்களை அதிக அளவில் வெளிமாநிலங்களுக்கு அனுப்ப துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 168)

44. ஆவின் பால் விற்பனையை அதிகரிக்க முதலில் துறை சந்தை வசதியை (Marketing) வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாவட்டங்களில் போதிய ஆவின் பால் முகவர்களை நியமனம் செய்வதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 173)

45. மேற்காணும் பணியிடங்களை விரைவில் நிரப்பிட துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இப்பணியிடங்கள் நியமனம் செய்யப்பட்டது குறித்து ஒரு அறிக்கையினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 176)

46. பணிவரன்முறைப்படுத்த இயலாத நிலையில் தினக் கூலிப் பணியாளராக தொடர்ந்து பணியாற்றிவரும் 10 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச் சேர்ந்த 155 தினக் கூலிப் பணியாளர்களுக்கும், மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் தேனி பால் குளிரூட்டும் நிலைய பணியாளர்கள் உட்பட 42 பணியாளர்களுக்கு 11–11–2013 முதல் திருத்திய ஊதிய விகிதம் வழங்கப்பட்டுள்ள விவரம் குறித்து அறிக்கையை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 182)

47. ஒய்வூதியம் குறித்து குழு அறிக்கையை துறை மூலம் பெறப்பட்டவுடன் இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை துறை உரிய முறையில் ஆய்வு செய்து பின்பற்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 186)

48. துறை இதுகுறித்து உரிய முறையில் ஆய்வு மேற்கொண்டு ஆவின் கடைகளில் ஆவின் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க வேண்டும் எனில், ஆவின் பொருட்கள் மட்டும் விற்பனை செய்வதற்கு துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.189)

49. பால் கொள்முதல் மற்றும் கையாளும் திறனை உயர்த்திட துறை உரிய நடவடிக்கையை துரிதமாக மேற்கொண்டு பிற மாநிலங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆவின் நிறுவனம் உள்ளதுபோல் தமிழ்நாட்டிலும் துவங்க நடடிவக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 194)

50. கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு மற்றும் மதுரை பால் பண்ணைகளில் மின் ஆளுமைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது குறித்து துறை குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பிவைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 197)

51. மாவட்ட வாரியாக புதிய உறுப்பினர்களை அதிகரிக்க சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மூலம் 3025 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ள விவரங்கள் குறித்த அறிக்கையை துறை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.200)

52. 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 இல் மேற்கூறப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கறவை மாட்டுக் கடன் பெற்ற பயனாளிகளின் விவரத்தை மாவட்ட வாரியாகக் குறிப்பிட்டு அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.205)

53. அரசு ஆணை (நிலை) எண் 306, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 20–11–2013 இன் கீழ் நலநிதி உதவித் தொகையின் அளவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அரசு ஆணை அரசிதழில் வெளியிடப்பட்டு துறை மேற்கொண்ட துரித நடவடிக்கை மூலம் 31 கோரிக்கை மனுக்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ள விவரத்தை துறை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.213)

54. மேற்கண்ட ஒன்றியங்கள் மேலும் உள்ள காலங்களுக்கு ESI கட்டணம் செலுத்துவதிலிருந்து விதி விலக்கு அளிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.217)

55. துறை விரைவான நடவடிக்கை எடுத்து சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 50 புதிய பால் பூத்துக்களை அமைத்து பால் விற்பனையை அதிகரிக்க வழிவகை ஏற்படுத்த வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.221)

56. காரைக்குடி பால்பதன ஆலையின் தரம் உயர்த்தவும், பழுதடைந்த இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களைக் கண்டறியவும் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு இப்பணிகளை நிறைவு செய்ய வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.224)

57. வேலூர் பால்பண்ணையில் பால் குளிர்விக்கப் பயன்படும் இயந்திரங்களை தேவையான அளவு கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்து, புதிய இயந்திரங்கள் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 227)

*****

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

04.06.2013	சென்னை
03.07.2013	தேனி
04.07.2013	திண்டுக்கல்
05.07.2013	திண்டுக்கல்
19.08.2013	சென்னை
20.08.2013	திருவள்ளூர்
21.08.2013	காஞ்சிபுரம்
19.09.2013	விருதுநகர்
20.09.2013	திருநெல்வேலி
05.11.2013	இராமநாதபுரம்
06.11.2013	சிவகங்கை
30.12.2013	சென்னை
26.06.2014	வேலூர்
27.06.2014	திருவண்ணாமலை